www.panmugam.com

# பண்முகம்
.com

பிப்ரவரி - 2026 மலர்-2 இதழ்-2

24
மணிநேரமும்
கேளுங்கள்
தமிழ்நாடு
fm.com

## 13 வயசு ரியல் ஹீரோ

விருப்ப சந்தா
ரூ.50 செலுத்த
ஸ்கேன் செய்யவும்
MS PADMA MEDIA HOUSE



# சொர்க்கம் இருக்கும் இடம்கண்டு பிடிப்பு

www.panmugam.com

# பன்முகம்

மலர்-1 இதழ்-12 .com



## உங்கள் படைப்புகளை அனுப்பிவிட்டீர்களா?

மார்ச் 2026

## பன்முகம் பல்சுவை மாத இதழ்

| | | |
|---|---|---|
| கவிதைகள் | 15 வரிகளுக்கு மிகாமல் | சிறந்த 3 கவிதைகளுக்கு தலா ₹100 பரிசு |
| சிறுகதைகள் | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | சிறந்த கதைக்கு ₹500 பரிசு. |
| கேள்விகள் | எதைப் பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம். | சிறந்த கேள்விக்கு ₹100 பரிசு. |
| கட்டுரை | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| திரை அனுபவம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| நூல் அறிமுகம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |

அனுப்பவேண்டிய முகவரி
tamilnaduepaper@gmail.com

கடைசிநாள்
**20.02.2026**

தொடர்புக்கு
**9337501889**

**படைப்புகளை அனுப்பும்போது உங்கள் பெயரையும், அலைபேசி எண்ணையும் தவறாமல் படைப்புக்குக் கீழ் குறிப்பிடவும்**

**அச்சு இதழ் ஆண்டு சந்தா Rs.800**
**மின்னிதழ் ஆண்டு சந்தா Rs.300**
**G-pay 9337501889**

# பதவி வரும்போது பணிவு வர வேண்டும்



ஒரு அரசர் தன் மகனுக்கு போர் பயிற்சி கொடுப்பதற்காக ஒரு பயிற்சியாளரிடம் சேர்ப்பிக்கிறார். ஆறு மாதங்கள் கழித்து வருமாறு பயிற்சியாளர் சொல்கிறார்.

ஆறு மாதங்கள் கழித்து ஞாபகமாக அரசரும் பயிற்சி பாசறைக்கு செல்கிறார்.

அங்கு அவரது மகன் மிக ஆக்ரோஷமாக பயிற்சி செய்து கொண்டிருக்கிறான். அவனது தோள்கள் திணவெடுத்து இருக்கின்றன.

அங்கிருக்கும் தூண்கள், பலகைகள் என்று அனைத்தையும் அவன் கைகள் பதம் பார்த்திருந்தன. அவனது உடலெங்கும் தழும்புகளால்நிறைந்திருந்தன. மிகுந்த திருப்தியுற்ற அரசர் பயிற்சியாளரிடம் சென்று நன்றி கூறி தனது மகனை அழைத்து செல்லலாமா என்று கேட்டார்.

அவன் இன்னும் தயாராகவில்லை இன்னும் ஆறு மாதங்கள் கழித்து வாருங்கள்" என்றார். அரசரும் குழப்பத்துடன் சரி என்று சொல்லி சென்றுவிட்டார்.

அடுத்த ஆறு மாதங்கள் கழித்து மீண்டும்

சென்றார். அப்போது அவரது மகன், மாமிச மலை போல் இருந்த, அந்த பயிற்சி பாசறையிலேயே 'மிகச்சிறந்த' வீரனுடன் மோதிக்கொண்டிருந்தான்.

மாமிச மலை' தான் வெல்வான் என்றிருந்த கணத்தில், சட்டென்று அவனை புரட்டிப் போட்டு வீழ்த்தி, சீற்றத்துடன் கர்ஜனை செய்தான் மகன். முகமெல்லாம் பூரிப்புடன் பயிற்சியாளரை பார்த்து, "இப்போது அவனை அழைத்து செல்லலாமா" என்றார்.



இல்லை அவன் இன்னும் தயாராகவில்லை, இன்னும் ஆறு மாதங்கள் கழித்து வாருங்கள்" என்றார். தயக்கத்துடன் விடைபெற்ற அரசர் குழப்பத்துடன் நாடு சேர்ந்தார்.

அடுத்த ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் பயிற்சி பாசறைக்கு வந்தார். அப்போது அவரது மகன் சண்டை நடக்கும் இடத்தில இருந்து விலகி நண்பர்களுடன் மழையை ரசித்துக் கொண்டிருந்தான்.

அரசர் பயிற்சியாளரை சந்தித்த முதல்நிமிடத் திலேயே "இப்போது அவன் தயாராய் இருக்கிறான், நீங்கள் அழைத்து செல்லலாம்" என்றார்.

அவன் ஆக்ரோஷமாக பயிற்சி செய்து கொண்டிருக்கும் போதெல்லாம் அவன் தயாரில்லை என்று சொன்ன நீங்கள், அவன் அமைதியாய் அமர்ந் திருக்கும் போது மட்டும் அழைத்து செல்ல சொல்கிறீர்களே ஏன்" என்று என்றார்.

அரைகுறையின் உச்சம் தான் ஆக்ரோஷம். வீரத்தின் உச்சம் என்றும் அமைதி தான்" என்றார் பயிற்சியாளர்.

புரியவில்லை" என்றார் அரசர்.

எப்பொழுது ஒருவனுக்கு திறமை குறைவாக இருக்கிறதோ, எப்பொழுது ஒருவனுக்கு தன் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கிறதோ அப்பொழுது தான் அவன் ஆக்ரோஷமாக இருப்பான்.

எப்பொழுது ஒருவனுக்கு மற்றவர் மேல் அன்பு வருகிறதோ, எப்பொழுது ஒருவன் முழு திறமை யையும் அடைகிறானோ அப்பொழுது அவன் அமைதியில் ஐக்கியமாவான்.

அது தான் ஒரு தலைவனுக்குரிய தகுதி. உங்கள் மகன் நாடாளும் தகுதி பெற்று விட்டான் அவனை அழைத்து செல்லுங்கள்" என்றார்......

பதவி வரும்போது பணிவு வர வேண்டும் துணிவும் வரவேண்டும் தோழா..

– சிவ.முத்துலட்சுமணன், போச்சம்பள்ளி

# சிரிப்போமா..! கொஞ்சம்...!!

இந்த உலகத்தில் என்னையும் ஒரு மனிதனாக மதித்து பொன்னாடை போர்த்தும் ஒரே நபர்.. சலூன் கடைக்காரர் மட்டுமே..! "நீங்க வெட்டுங்க பாஸ்.."..!! .

● ● ●

ஒரு புடவை வாங்க முன்னூறு புடவைகளைப் புரட்டிப் பார்த்த மனைவியிடம் எரிச்சலுடன் கணவன் சொன்னான்:

"ஆதிகாலத்தில் ஏவாள் வெறும் இலையை மட்டுமே உடுத்தி இருந்தாள். இது போன்ற தொல்லைகள் நல்ல வேளை ஆதாமுக்கு இல்லை."

இதற்கு மனைவி சொன்ன பதில்:

"அதுக்கு அவன் எத்தனை மரம் ஏறி இறங்கினானோ?"

● ● ●





# முட்டையின் வரலாறு

முட்டையின் வரலாற்றைத் தேடிச் செல்ல வேண்டுமென்றால், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக நாம் செல்ல வேண்டும். கிமு 3200 லேயே எகிப்தியர் முட்டையை உணவாக சாப்பிட்டு வந்தார்கள். ஐரோப்பியர்கள் கிமு 600ல் இருந்து முட்டையை டோஸ்ட் செய்து சாப்பிட்டு வந்தனர்.

முட்டைகளை பெரும்பாலும் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச்செல்லும் போது வழியில் உடைந்துவிடும். இதை தடுக்க 1911ம் ஆண்டு கனடா நாட்டைச் சேர்ந்தஜோசப் கோய்ல் என்பவர் அட்டையால் ஒரு பெட்டி செய்தார். இந்த முறைதான் இன்றுவரை நாம் முட்டை எடுத்துச் செல்லக் கடைப்பிடித்து வருகிறோம்.



### முட்டையின் எடை

அமெரிக்காவில் உள்ள தர அளவுகோல்படி முட்டையின் அளவை வைத்து அது பிரிக்கப் படுவதில்லை. எடையை வைத்தே அவர்கள் முட்டையை பிரிக்கின்றனர். 12 முட்டைகளில் உள்ள எடை 850 கிராம் (30 அவுன்ஸ்) இருந்தால், அது ஜம்போ வகை முட்டையாகும். இதுதான் பெரியதும் கூட.

### முட்டையை எப்படி சாப்பிடலாம்?

முடிந்தவரை நாம் முட்டையை வேக வைத்து சாப்பிடுவது தான் நல்லதாகும். அல்லது ஆப்பாயில் செய்துச் சாப்பிடலாம். முட்டையைவறுத்துச் சாப்பிடுவதால் அதிலிருக்கும் புரதச்சத்து முழுமையாக நமக்கு கிடைக்காமல் போய்விடுகிறது.

வேகவைத்த முட்டை மற்றும் பச்சை முட்டையை எப்படி கண்டுபிடிப்பது?





வேகவைத்த முட்டையைச் சுற்றிவிட்டால் வேகமாகச் சுற்றும். பச்சை முட்டையைச் சுற்றிவிட்டால் கொஞ்சம் தள்ளாடி ஆடும்.

முட்டை கிரேடு எப்படி செய்கிறார்கள் தெரியுமா ?

முட்டை ஓட்டின் நிலை மற்றும் முட்டை பார்ப்பதற்கு எப்படி இருக்கிறது என்பதை வைத்தே முட்டைகள் கிரேடு தயார் செய்யப்படுகின்றன.

மேலும் முதல் ரகம் முட்டையின் ஓடுகள் உடையாமல், சுத்தமாக இருக்கும். இதன் வெள்ளைக்கரு அடர்த்தியாகவும், மஞ்சள்கரு கலையாமலும் இருக்கும்.

இரண்டாம் ரகம் முட்டையின் வெள்ளைக்கரு கொஞ்சம் அடர்த்தி குறைந்து காணப்படும். கடைகளில் விற்கப்படும் பெரும்பாலான முட்டைகள் இந்த ரகம்தான்.

மூன்றாம் ரகம் முட்டையின் ஓடுகளில் சிறு விரிசல் இருக்கலாம். வெள்ளைக்கரு கொஞ்சம் தண்ணீராக இருக்கும். இவை தான் ஹோட்டல்களில் அதிகம் பயன்படுத்துகின்றனர்.




முட்டை ஓட்டின் நிறத்துக்கும் அதன் சத்துக்கும் தொடர்பு இல்லை. ஆனால், முட்டையின் மஞ்சள் கருவின் நிறத்தைப் பொறுத்தே அதன் சத்தின் அளவு இருக்கும். அதேபோல் முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றி, துர்நாற்றம் வருகிறதா எனப் பார்த்துவிட்டுச் சமைக்கலாம்.

புதிய முட்டை எது? பழைய முட்டை எது? என எப்படி கண்டுபிடிப்பது?

பழைய முட்டையை தண்ணீரில் போட்டால் மிதக்கும். புதிய முட்டை என்றால் மூழ்கும். அவித்த பிறகு புதிய முட்டையின் ஓட்டை உரிப்பது சிரமமாக இருக்கும்.

முட்டையில் உள்ள சத்துகள் என்ன ?

வைட்டமின் பி12, ஆன்டி ஆக்ஸிடென்ட்ஸ் குணங்கள்கொண்ட அமினோ ஆசிட் உள்ளிட்ட சத்துகள் உள்ளன. இவை புற்றுநோய்க்கு எதிராகச் செயல்படக்கூடியவை. கண்களுக்கு நல்லது செய்யும் லூட்டின் முட்டையில் அதிகம்இருக்கிறது.

வெள்ளைமுட்டைக்கும் பிரவுன் நிற முட்டைக்கும் சத்துகள் அளவில் எந்த மாற்றமும் இல்லை. முட்டையை பேக் செய்யப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் சாப்பிட வேண்டும். நாட்கள் ஆக ஆகச் சத்துகள் குறைந்துகொண்டே இருக்கும்.

- A s Govinda rajan
Chennai-600024

# சோயா சங்க்ஸ் பிரியாணி!

தேவையான பொருட்கள்

1 கப் பாஸ்மதி அரிசி
½ கப் சோயா சங்ஸ்
1 பெரிய வெங்காயம்
1 தக்காளி
3 பச்சை மிளகாய்
1 டேபிள் ஸ்பூன் தயிர்
சிறிதுநறுக்கிய கேரட் பீன்ஸ் பட்டாணி
½ இஞ்சி பூண்டு விழுது
1 டீஸ்பூன்பிரியாணி மசாலா
1 டீஸ்பூன் மிளகாய்த்தூள்
½ டீஸ்பூன் மஞ்சள் தூள்
சிறிதுகொத்தமல்லி
புதினா இலைகள்
2டீஸ்பூன்
எண்ணெய்,நெய்
தாளிக்க
2பட்டை,
2கிராம்பு,
1ஏலக்காய்
2பிரியாணிஇலை

செய்முறை:

சோயாவில் சுடுதண்ணீரை ஊற்றி 15 நிமிடம் ஊறவிடவும் பிறகு குளிர்ந்த நீரால் அலச எடுத்துக் கொள்ளவும். குக்கரில் எண்ணெய் நெய் சேர்த்து தாளிக்கும் பொருட்களைச் சேர்க்கவும்

வெங்காயம் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கி பிறகு தக்காளி காய்கறிகளை சேர்க்கவும். புதினா கொத்தமல்லி சேர்த்து கிளறவும்

சிறிது தயிர் சோயாவை சேர்த்து குறைந்த தீயில் 5 நிமிடம் வதக்கவும். அதில் தூள் வகை களை சேர்க்கவும்.

நன்றாக வதக்கிய பின் அரிசியை சேர்க் கவும்.

நன்றாக கிளறி ஒன்றுக்கு இரண்டு பங்கு தண்ணீர் சேர்த்து குக்கரை மூடி ஒரு விசில் 10 நிமிடம் சிம்மில் வைத்து இறக்கவும். பிரமாதமாக இருக்கும் இந்த சோயா சங்க்ஸ் பிரியாணி.



# கொண்டக்கடலை பிரியாணி!!



தேவையான பொருட்கள்
1 கப்வெள்ளை கொண்டை ககடலை
2 ½ கப்அரிசி
3வெங்காயம்
3–4 தக்காளி
தேவைக்கேற்பபுதினா கொ.மல்லி
ஒரு ஸ்பூன்இஞ்சி பூண்டு விழுது
பட்டை லவங்கம் ஏலக்காய் மராட்டி மொக்கு
½நட்சத்திர சோம்புபிரிஞ்இலை

செய்முறை விளக்கம்:

கொண்டைகடலையை வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்

வெங்காயத்தை நீளவாக்கில் வெட்டிக் கொள்ளவும்....குக்ககரை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு மசாலா பொருட்களை சேர்த்து பின் வெங்காயம் 3 பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும்

பின்னர் இஞ்சி பூண்டு விழுது சோம்பு சேர்த்து வதக்கவும்

தக்காளி புதினா கொத்தமல்லி சேர்த்து வதக்கி....கொண்டைக்கடலை மிளகாய் தூள் மல்லி தூள் மஞ்சள் தூள் சேர்த்து கிளறவும்

தயிர் 1/2 கப் சேர்த்து கறிமசால் பொடி சேர்த்து கிளறி தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும்

தண்ணீர் கொதித்ததும் அரிசி சேர்த்து கிளறவும்

தண்ணீர் சிறிது வற்றியதும் 2 ஸ்பூன் நெய் சேர்த்து கிளறி 15 நிமிடம் மிகசிறிய தீயில் வைத்து வெயிட் போட்டு மூடி விடவும்

15 நிமிடம் கழித்து குக்கரை திறந்து கொண்டைக்கடலை பிரியாணியை பரிமாறலாம்



# அன்புள்ள தம்பிக்கு...

அன்புள்ள தம்பிக்கு, என் நலம் பற்றி உனக்கு அக்கறை இல்லை என்பது எனக்கு எப்பொழுதே தெரியும். ஆதலால், நான் நலம் என்பதை சொல்லாமல், நலமா நீ என்ற விசாரிப்போடு தொடங்குகிறேன் இந்தக் கடிதத்தை.

நான் கடந்து வந்த பாதையை, நீ உற்று நோக்கி உணர்ந்திருப்பாய். பூக்கள்மீதும் வெல்வெட்டுச் சிவப்பு கம்பளத்தின் மீதும், நான் நடந்து வரவில்லை. என்னை யாரும் அப்படி வர வேற்கவும் இல்லை.

வலி நிறைந்ததுதான் என் வாழ்க்கை. அதனைக் கடந்துதான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

அனைத்து வசதிகளையும் கொண்டு ஆடம்பரமான சூழலில் நாம் வளர்க்கப்படவில்லை. ஆனால், அழகான வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றிப் படித்து முன்னேற வேண்டும் என்ற பிடிப்பு உடையச் சொற்களை உரமாக ஊட்டி நம்மை வளர்த்து உருவாக்கி உள்ளனர் நமது பெற்றோர்கள்.

அவர்களின் தியாகத்தை ஒருநாள் ஒன்றாகக் கூடியாவது கொண்டாடியுள்ளோமா என நினைத்துப் பார்க்க வேண்டும்.

நமது அம்மாவின் நம்பிக்கையூட்டும்சொல்லான "படி. அனைத்து வசதியும் நம்மைவந்தடையும்" எனப் பிடிப்புடையச் சொன்ன சொற்கள்தான், இன்று சமூகத்தில் நம்மை மதிப்பு மிக்கவனாக உயர்த்தியுள்ளது.

சரி இவையெல்லாம் எதற்கென்று இக்கடிதத்தைப் படிக்கும்போது உனக்குச் சலிப்பு ஏற்படலாம்.

ஒரு மலரும் நினைவுகளுக்காக,

இனிதான் என் மனதில் உள்ளதைச் சொல்லப் போகிறேன்." என நீண்ட நாட்களுக்குப் பிறகு, நான்குப் பக்க அளவில் ஒரு பெரியக் கடிதத்தை எழுதி முடித்தான் எழிலரசன்.

எழுதிய கடிதத்தை ஒரு உரையில் போட்டுப் பசையை ஒட்டி, இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு, பஜார் வீதியில் உள்ள அஞ்சலகத்திற்குச் சென்று, அஞ்சல் பெட்டியின் உள்ளே போட்டுவிட்டு, மீண்டும் திரும்பி வந்து அசதியாக உட்கார்ந்தான்.

வீட்டின் வெளியே தொங்கவிடப்பட்ட அஞ்சல் பெட்டியில் ஏதாவது கடிதம் வந்துள்ளதா எனப் பார்க்க வந்தவனின் கண்ணில் தபால்காரரே நேரில் பட்டதால், "வணக்கம்" என்று சொன்னவனுக்கு "ஐயா வணக்கம், உங்களுக்கு ஒரு கடிதம்" எனச் சிரித்துக் கொண்டேக் கடிதத்தைப்



புகழரசனிடம் கொடுத்தார் தபால் காரார்.

கடிதத்தில் தன் அண்ணனின் பெயர் இருந்ததால், உரையைக் கிழித்து உள்ளிருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டே, மாடியில்உள்ள அவனது தனி அறைக்குச் சென்றான்.



அறையைத் திறந்து மின்விசிறியை ஓட விட்டு, கட்டிலில் உட்கார்ந்தபடியே படிக்க ஆரம்பித்தான்.

நான் எடுத்த அத்தனை முயற்சிகளையும் நீ குறைத்தே மதிப்பிட்டாய். என்மீது நம்பிக்கை அற்ற வனாய் அனைத்திலும் முடிவு எடுத்தது நீதான். உன் வயது, உன் படிப்பு, உன் திறமை, நமது வாழ்வின் சூழல் இதனைக் கருத்தில்கொண்டு, உணக்குப் பெண் பார்த்துக் கொண்டிருந்தபோது, நீயாகவே ஓர் இடம் சென்று, பெண் பார்த்து, சரி என்று சொல்லிவிட்டாய். அதனால்தான், உன் முடிவில் உறுதியாக நிற்க வேண்டியச் சூழலுக்கு நான் தள்ளப்பட்டேன்.

நமது வருமானத்திற்கு தகுந்தாற்போல் செலவும், சேமிப்பும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், வீடு கட்ட வீட்டு மனை ஒன்றைப் பார்த்து, சரியா என உன் முடிவைக் கேட்டேன், கட்டி முடிக்கப்பட்ட வீட்டைக்காட்டி, இது சரி பட்டு வருமா என்று என்னிடம் ஆலோசனைக்கேட்டு, சட்டென்று ஒப்பந்த அடிப்படையில் உன்சக்திக்கு மீறிச் செலவு செய்துவிட்டு, என்னோடுமுரண் பட்டு விலகிநிற்கிறாய். யாரும் எனக்கு உதவி செய்யவில்லை என்று, அதை மட்டும் சொல்லியிருந்தால் பரவாயில்லை நீ வழிகாட்டவில்லை என்று என்மீது கோபமாகக் குற்றம் சுமத்துகிறாய்.



பல இடங்களில் கணக்குப் பார்த்துச்செலவு செய்ய வேண்டும். அம்மா அப்பா அக்கா, தங்கைகளுக்குச் செலவு செய்வதில் முடிந்த வரை மனமுவந்து செய்ய வேண்டும்.தன்னால் முடியாவிட்டாலும், நம்பிக்கையூட்டும் வார்த்தை யை “பார்க்கலாம்” என்றாவது பதில் சொல்லி யிருக்கலாம். ஆனால், நீ அதிக மௌனத்தைக் கடைபிடித்தாய். ஆதலால், வருத்தம்தான்உன்மீது.

நீ செய்த செயலில் வருத்தத்திற்குறியது, சில வருடங்களுக்கு முன்பு பலமுறை கைபேசி வழியே அழைப்பு விடுத்தும் எடுக்காமல் விட்டது தான்.

அந்த நேரத்தில் அம்மாவின் இறுதிக்கட்ட மகிழ்ச்சியை, இங்கு அப்படியே பதிவு செய்கிறேன். முடிந்தால் உனது தனி அறையைத் தாழையிட்டுக் கொண்டுக் கத்தி அழுது உனது கனத்த மனதை இளகியதாக மாற்றிக்கொள்.

“கயல்விழிகிட்ட பேசுமா” எனக் கை பேசியை கொண்டுக் கொடுத்த போது, ஒட்டு மொத்த முகமும் மகிழ்ச்சியில் திளைத்தது. என்னிடமிருந்து வாங்கிய கைபேசியை “என் னப்பா நின்னு போச்சு” என்று திருப்பித்தந்தாள். முயற்சியைக் கைவிடவில்லை. மீண்டும் உனக்கு முயற்சி செய்தேன். நானும் கடைசியில் வெறுத்து “சரிம்மா அப்புறம் பார்க்கலாம்” என்று வந்து விடுவேன்.

அடுத்த சில நாட்களில் “அம்மா கதிரவன் கிட்ட பேசுமா” என்று கொடுத்தேன். “ஆமாம்பா புள்ள இளைச்சிட்டான்பா”ன்னு மகிழ்ச்சியாக வாங்கி ஏமாற்றத்தோடு என்னிடம் திருப்பிக் கொடுத்தாள்.

திரும்பத் திரும்பத் “தம்பிக்குப் போட்டுக் கொடுப்பா” எனக் கேட்கும் போதெல்லாம், ஏமாற் றத்தோடு சோகம் கலந்த முகத்தோடு என்னிடம் வாங்கிய கைபேசியை திருப்பித் தந்தாள்.

பல நாட்கள் முயற்சி செய்தேன். நீ போட்ட வட்டத்துக்குள் நின்று,என்னுடன் முரண்பட்டு பிடிவாதத்தோடு மௌனமாய் விலகி நிற்கிறாய். உன் மௌனத்தின் வலி எனக்குத் தெரியும்.

அந்த வட்டத்தை விட்டு வெளியே வா.

கடைசியா சில நிகழ்வுகளை உன் நினைவுக்குக் கொண்டுவந்து, என் கடிதத்தை முடித் துக்கொள்கிறேன்.

எனக்குத் திருமணம் நடந்து குழந்தைபிறந்த பிறகும், குறைந்தபட்ச வருமானத்தில் அம்மா அப்பாவோடு வாழ்ந்து கொண்டு, இந்தப் போட்டி உலகில் வெற்றி பெற வேண்டும் என்று படித்துக் கொண்டிருந்தேன். ஒன்றாய் அப்பாவோடும் அம்மாவோடும் வாழ்ந்த சூழலில், பல இடங்களில் முரண்பட்டு



இருந்தாலும் மன நிம்மதி இருந்தது.

சாதாரண வாழ்க்கை முறையில் பத்து வருடங்களுக்கு மேலாகக் கூட்டுக் குடும்பத்தில் தாக்குப்பிடித்தேன். ஆனால்,

நீ குறைந்தபட்சம் அம்மாவை பத்து நாட்க ளுக்கு உன்னோடு வைத்துக்கொள்ள முடியாமல் என்னிடத்தில் விட்டுவிட்டு சென்றாய். அது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தரவில்லை. ஆனால்,

ஒரு நாள் அதிகாலையில், கைபேசி வழியே அழைப்பு கொடுத்து அம்மாவின் இறப்புச் செய்தி யை அறிவித்ததும், மதித்து மாலையோடு வந்து குற்ற உணர்ச்சியோடு அழுது நின்றபோது, உன் மீது கோபம் வரவில்லை.

பாவம், இனி நீயும் வலி யைச் சுமந்துகொண்டு வாழப் போகிறாயென எண்ணி, என்னைத் தேற்றிக்கொண்டேன்.

உன் மௌனத்திற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று அப்பா இறந்தபோது, அம்மா தொலைத்த தங்க நாணயத்தைப் பற்றிச் சந்தேகப் பார்வை என்மீது திரும்பியபோதும்.

உனக்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தோய்வோடு செய்ததில், சிலப் பிழைகள் நடந்தது. அந்த வலியும் எனக்குள் மன அழுத்தத்தைத் தருகிறது.

தங்கையின் குடும்பச் சுமையில் பாதியைக் குறைக்க முயற்சி செய்கிறாயோ இல்லையோ, சரி ஆகட்டும் என்று சொல்லியிருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

ஆனால், இதுதான் என்னால் முடியும், ஒரு தாய் மாமனாய் என்ன செய்ய முடியுமோ அதை மட்டுமே செய்வேன் என்று கூறி கைவிரித்து விட்டாய். அதனால் உன்மீது வருத்தமே.

தங்கையின் சேமிப்புப் பணத்தில்தான், நான் திருப்பிச் செய்திருக்கிறேன். ஆனால், நம்பிக்கையாகத் தங்கையெடுத்த முடிவிற்கு நான் ஒத்துழைப்புக் கொடுத்தேன். எல்லாம் நன் றாகவே முடிந்தது.

கடைசியாய் ஒரு சில வரிகளில்,

அப்பா அம்மா கட்டிய கிராமத்து வீட்டை, நீயும் அக்காவும் சரிபாதியாக எடுத்துக்கொள்ளுங்கள். எனக்குத் தேவையில்லை. ஒருவேளை ஒரு அண்ணனாய் உங்களுக்குச் செய்ய வேண்டியக் கடமையைச் செய்யத் தவறியிருந்தால், அதற் காக நான் எடுத்த இந்த முடிவு ஈடாகும் என உறுதிமொழியோடு, இந்தக் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

படித்து முடித்ததும் வழிந்தோடியக் கண்ணீ ரைக் கண்டு, அவனது எதிரில் நின்ற தன் மனைவி “என்னங்க, ஏன் அழறீங்க” எனக் கேட்டவளுக்கு, என்னைப் போலவே பதில்சொன் னான்.

பேசாமல் மௌனத்தால் புகழரசன்.

– கயப்பாக்கம் இரா.இரமேஷ்,

# Secret ஓவியன்

பாகம் 04

■ நிரஞ்சனா நெப்போலியன்

## தூரிகை

முருகன் கூறியதை உள்வாங்கிய ஓவியன்,

"ம்ம்ம்... நீங்க என்ன நினைக்கிறீங்க? இது இதோட முடியும்னு நினைக்கிறீங்களா?"

"ஒருவேளை, அந்தக் கொலைகாரன் நம்ம டிபார்ட்மெண்ட்டைப் பத்தி போதிய அளவுக்கு நாலெட்ஜ் இருக்கிறவனா இருந்தா, இந்தக் கேசை இப்போ யார் எடுத்திருக்கிறதுன்னு தெரிஞ்சி, இதோட இதை நிறுத்திக்குவான், சார்." என்று ஓவியனுக்கு மறைமுகமாய் புகழாரம் சூட்டினான்.

"அப்படின்னா, முதல் கொலைக்குப் பிறகு நடந்த மத்த ரெண்டு கொலைக்கும் நீங்க தான் காரணம்னு சொல்றீங்களா?" என்றான் ஓவியன் முகத்தில் எந்தப் பாவமும் இன்றி.

"என்ன சார் சொல்றீங்க?" என்று அதிர்ந்தான் முருகன்.

"உங்க திறமையைப் பார்த்து அவன்பயந்திருந்தா, முதல் கொலைக்குப் பிறகு மத்தகொலைகளைச் செஞ்சிருக்க மாட்டான் இல்லையா? அவன் அப்படிச் செய்யாம தொடர்ந்துகிட்டே இருக்கான்னா, உங்க திறமை மேல அவனுக்கு அவ்வளவு நம்பிக்கைன்னு தானே அர்த்தம்?"

நிச்சயம் அது சரியான நக்கல் தான். ஆனால், அதைச் செய்யும் பொழுது, துளி அளவு கூட முகத்தில் சிரிப்பே இல்லாமல் செய்ய, ஓவியனுக்கு மிகப்பெரிய திறமை வேண்டும். தான் பேசியவார்த்தை, தன்னையே பதம் பார்க்கும் என்று எதிர்பார்க்காத முருகன், என்ன பதில் கூறுவது என்று திணறினான்.

"என் முகத்துக்கு நேரா என்னைப் பாராட்டிப் பேசுறது எனக்குச் சுத்தமா பிடிக்காது. புரிஞ்சுதா?" என்றான் ஓவியன்.

சரி என்று தலையசைத்தான் முருகன்.

"அவன் இதோட நிறுத்த மாட்டான். இந்தக் கொலைகளுக்கு பின்னாடி நிச்சயம் ஏதோ ஒரு காரணம் இருக்கு. அவனுக்கு அதுல திருப்தி ஏற்படாத வரைக்கும் இந்தக் கொலைகள் தொடரும்." என்றான் ஓவியன்.

...........

சன் ரைஸ் அபார்ட்மெண்ட்ஸ்

ஆறு, எட்டடுக்கு கட்டிடங்களை உள்ளடக்கியிருந்த, தான் வசித்து வந்த அடுக்குமாடி குடியிருப்பின் முன், ஜிப்பிலிருந்து கீழே இறங்கினான் ஓவியன். அன்று அவன் வசித்த கட்டிடத்தில் மரணம் நிகழ்ந்திருந்தது. அதுவும், அவன் தங்கி இருந்த அதே தளத்தில். அதுவரை அந்த வீட்டில் தங்கியிருந்தது யார் என்பது கூட அவனுக்குத் தெரியாது. ஒரு தம்பதியினர் தற்கொலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நாலு வயது பெண் குழந்தை, அவர்களை எழுப்ப முயன்று கொண்டிருந்ததைப் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது. அந்தக் குழந்தையைப் பார்த்து மென்று முழுங்கினான் ஓவியன். அதில் அவன் கவனத்தைக் கவர்ந்த விஷயம் என்னவென்றால்,

"அண்ணி..." என்று அழுது கதறிய ஒரு பெண்.

அவள் அண்ணி என்று அழுகிறாள்என்றால், அவளது அண்ணியுடன் சேர்ந்து இருந்தது அவளது அண்ணன் தானே? அப்படி என் றால், அவள் அண்ணனுக்காக அழாமல், அண்ணிக்காக ஏன் அழுகிறாள்? அது அவ னுக்கு விசித்திரமாய் இருந்தது. அந்தப் பெண் பார்க்கவே மிகவும் பாவமாய் இருந்தாள். அவளது சிவந்திருந்த முகம், அவள் விடாமல் அழுதிருக்கிறாள் என்பதை உணர்த்தியது. கலைந்த கூந்தலும், அழுது வீங்கியிருந்த கண்களும், அந்தப் பெண்ணை மேலும் பரிதாப மாய் கட்டின.

"அம்மா, எழுந்திடுமா." என்று கூறிய குழந்தையைப் பார்த்தவர் மனம் பதறியது.

அந்தக் குழந்தையைக் கட்டிக் கொண்டு அழுத அந்தப் பெண், சுற்றி இருந்தவர்களைத் துயரத்தில் ஆழ்த்தினாள்.

அங்கு கூடியிருந்த மக்கள் பேசிய பேச்சு ஓவியனின் காதில் நன்றாகவே விழுந்தது.



"பாவம், இந்தப் பொண்ணு, எப்படி இந்தக் குழந்தையை வச்சுக்கிட்டு தன் னந்தனியா இந்த உலகத்துலவாழ போகுதோ..." என்றார் ஒருபெண்மணி.

"அவங்க அண்ணி, தூரிகையைத் தன் சொந்தக் குழந்தை மாதிரி, பொத்தி பொத்தி வச்சிருப்பா..." என் றார் மற்றொருவர்.

"எந்த உதவியும் இல்லாம, ஒரு பொம்பள புள்ள இந்த சமுதாயத்துல வாழறது ரொம்ப கஷ்டம்."

"தூரிகைக்கு ஒண்ணுமே தெரியாது. எப்படித் தான் அவ கரையேற போறாளோ..."

அவர்கள் பேசிக் கொண்டிருந்த, தூரிகையின் மீது தன் பார்வையை ஓட்டிவிட்டு, அமைதியாய் தன் வீட்டிற்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டான் ஓவியன். ஏனோ தெரியவில்லை, அந்த மரணக் காட்சி அவன் கண் முன்னால் வலம் வந்து கொண்டிருந்தது... போலீஸ் புத்தி ஆயிற்றே...! அதில் இருந்த விசித்திரத்தை ஆராயத்தானே செய்யும்...!

– தொடரும்...



தினமும் புதிய புதிய
இசை வீடியோக்கள்
ஆன்மிக பாடல்கள்
சுவையான சமையல்
வீடியோக்களை
வெளியிடும்
dheivamtv.com
இணையதளத்தை பார்க்கவும்
வாட்சப் மற்றும் தொலைபேசி எண்
7789941009

# மீம்ஸ் கலாட்டா


அம்மா பகல்ல வர தூக்கம் நைட்ல வர
மாட்டேங்குதே... என்ன வியாதியா இருக்கும்.
அம்மா
இதற்கு பெயர் தான் ஃபோன் நோண்டியா
வியாதி மகனே...
நான்


பொண்ணுங்களுக்கு பைக்
ஓட்டற பையனைவிட
பாத்திரம் கழுவுற
பையனைக் தான் ரொம்ப
பிடிக்கும்.


குனிஞ்ச தல நிமிராம நடக்குற
பொண்ணு இருந்தா பாத்து
சொல்லுங்க ஐயரே..
இப்ப இருக்குற பொண்ணுங்க
பூராமே குனிஞ்ச தல நிமிராம
தாம்மா நடக்குது


ஆந்திராவில்
பகலில் 'நைட்டி' அணிந்தால்
ரூ.2 ஆயிரம் அபராதம்
தகவல் கொடுப்பவருக்கு ரூ.1000 சன்மானம்
நகரி, நவ.10–
பெண்கள் இரவில் தூங்கும் போது அணிந்துகொள்வதற்காக
Lonely king's
Logi creations
1.0
ஐயோ!!! இந்த சட்டத்த தமிழ்நாட்டுல கொண்டு
வந்தா லட்சம் லட்சமா சம்பாதிக்கலாமே ஈஸ்வரா




ஒரே தரமான நம்பர் 1 நாளிதழ்

தமிழ்நாடு
இபேப்பர்.காம்



# வேர் தழுவிய விழுதுகள்

அந்த ஊரின் பெயர் மங்கலபுரம். ஊரின் எல்லையிலேயே கம்பீரமாக நின்றிருந்தது 'லட்சுமி நிவாஸ்'. அது வெறும் சிமெண்ட் கட்டிடம் அல்ல; நான்கு தலைமுறைகளின் கதைகளைத் தன் சுவர்களில் சுமந்து நிற்கும் ஒரு காவியம். அந்த வீட்டின் மூத்தவர், எண்பது வயதான சிவராமன் ஐயா. அவர் ஒரு ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்.

அவருக்கு மூன்று மகன்கள், இரண்டு மகள்கள். எல்லோரும் அதே பெரிய வீட்டில், ஒரே கூரையின் கீழ், ஒரே சமையலறையைப் பகிர்ந்து வாழ்ந்து வந்தனர். இன்றைய அவசர உலகில் 'தனிக்குடித்தனம்' என்பது நாகரிகமாகக் கருதப்படும் வேளையில், சிவராமனின் குடும்பம் ஒரு ஆச்சரியமான விதிவிலக்கு.

அதிகாலை ஐந்து மணிக்கே அந்த வீடு உயிர் பெறத் தொடங்கிவிடும். சிவராமனின் மனைவி ஜானகி அம்மாள், தன் மருமகள்களுடன் சேர்ந்து சமையலறையில் இருப்பார்.

"மீனா, இன்னைக்கு விஸ்வநாதனுக்குப் பிடிச்ச கொள்ளுத் துவையல் அரைச்சிடு. ரகுவுக்குப் பிடிச்ச உருளைக்கிழங்கு மசாலாவையும் மறந்திடாதீங்க," என்று ஜானகி அம்மாள் சொல்ல, மூத்த மருமகள் மீனா புன்னகையோடு தலையசைத்தாள்.

இளைய மருமகள் கவிதா, "அத்தை, குழந்தைகளுக்கு இன்னைக்கு லஞ்ச் பாக்ஸிற்குப் பாஸ்தா வேணும்னு கேக்குறாங்க. ஆனா மாமாவுக்கு அது பிடிக்காதே?" என்று தயக்கத்துடன் கேட்டாள்.

அதற்கு ஜானகி அம்மாள், " குழந்தைகளுக்குப் பிடிச்சதைச் செய். உன் மாமாவுக்கு நான் கஞ்சி காய்ச்சித் தந்துடுறேன். நாம எல்லாரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடும்போது, தட்டுல என்ன இருக்குங்கிறதை விட, யார் எதை விரும்பி



சாப்பிடறாங்க என்பது தான் முக்கியம் கவிதா," என்றார் நிதானமாக.

வாசலில் உள்ள திண்ணையில் சிவராமன் உட்கார்ந்து செய்தித்தாள் படித்துக் கொண்டிருந் தார். அவர் அருகில் அவர் பேரன் ஆகாஷ் அமர்ந்திருந்தான். ஆகாஷ் சென்னையில் ஒரு மென்பொருள் நிறுவனத்தில் வேலை பார்க்கிறான். விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்தான்.

"தாத்தா, எனக்கு ஒரு சந்தேகம். சிட்டில என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் அவங்க பொண்டாட்டி குழந்தையோட சின்ன ஃப்ளாட்ல நிம்மதியா இருக்காங்க. ஆனா இங்க பாருங்க... ஒரு சின்ன விஷயத்துக்குக் கூட எல்லாரும் ஒருத்தரை ஒருத்தர் கேட்டுக்கிட்டே இருக்கீங்க. உங்களுக்கு இது சுதந்திரம் இல்லாத மாதிரித் தெரியலையா?" என்று கேட்டான் ஆகாஷ்.

சிவராமன் தன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தபடி சிரித்தார். "ஆகாஷ், சுதந்திரம்னா என்னன்னு நினைக்கிற? உனக்கு என்ன தோணுதோ அதை மட்டும் செய்றது சுதந்திரம் இல்லை. நீ விழும்போது உன்னைத் தாங்கிக் பிடிக்கப் பத்து கைகள் இருக்குமே, அந்த தைரியத் துல நீ நடப்பியே, அதுதான் உண்மையான சுதந் திரம்."

"புரியல தாத்தா..."

"சொல்றேன் கேளு. தனி மரம் தோப்பாகா துன்னு சும்மாவா சொன்னாங்க? ஒரு செடி தனியா வளர்ந்தா சீக்கிரம் காஞ்சு போயிடும். ஆனா அடர்ந்த காடா இருந்தா, மழை மேகத்தையே ஈர்க்கும். நம்ம குடும்பம் ஒரு காடு மாதிரி. இங்க சத்தம் இருக்கும், சண்டை இருக்கும், ஆனா ஒருத்தருக்கு ஒரு கஷ்டம்னா மொத்தக் காடும் ஒண்ணா நிக்கும்."

சில நாட்களுக்குப் பிறகு, அந்த வீட்டின் அமைதியைக் குலைக்கும் ஒரு செய்தி வந்தது. சிவராமனின் இரண்டாவது மகன் ரகுவின் துணிக்கடையில் ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டு விட்டது. பல லட்ச ரூபாய் மதிப்புள்ள துணிகள் சாம்பலாகிவிட்டன. ரகு நிலைகுலைந்து போனார்.

வீட்டு ஹாலில் அனைவரும் கூடினர். ரகு தலையில் கை வைத்தபடி அழுது கொண்டிருந்தார். "எல்லாமே போச்சு அண்ணே... பேங்க் லோன், கஸ்டமர் ஆர்டர்... நான் இனி என்ன செய்வேன்? நம்ம குடும்ப மானமே போயிடுமே!"

மூத்த மகன் விஸ்வநாதன் அவர் தோளைத் தட்டினார். "ரகு, முதல்ல அழறதை நிறுத்து. கடைதானே போச்சு? கை கால் நல்லாத்தானே இருக்கு? நாம எல்லாரும் இருக்கும்போது நீ ஏன் கவலைப்படுற?"

மூன்றாவது மகன் பாஸ்கர், "அண்ணே, என்



பி.எஃப் அக்கவுண்ட்ல கொஞ்சம் பணம் இருக்கு. அதை நாளைக்கே எடுத்துட்டு வர்றேன். மீனா அண்ணி, உங்ககிட்ட இருந்த நகை ஏதாவது இருந்தா கொடுங்க, அடமானம் வைப்போம்," என்றான் தயக்கமின்றி.

மருமகள்கள் மீனா மற்றும் கவிதா இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மீனா உள்ளே சென்று தனது பீரோவைத் திறந்து, தனது திருமணத்திற்காகச் சேர்த்து வைத்திருந்த



நகைகளை எடுத்துக் கொண்டு வந்தாள்.

"தம்பி, இதுல பாதி நகை என் பிறந்த வீட்டுல கொடுத்தது. மீதி இங்க கொடுத்தது. இது எதுவுமே நம்ம குடும்ப மானத்தை விடப் பெருசு இல்லை. இதை வச்சு கடையைத் திருத்தி அமைங்க," என்று மீனாவின் குரலில் ஒரு உறுதி இருந்தது.

இதைக் கண்ட ரகுவின் கண்களில் கண்ணீர் பெருகியது. "அண்ணி... இது உங்க மகளோட கல்யாணத்துக்காகச் சேர்த்தது..."

"மகள் கல்யாணத்துக்கு இன்னும் நேரம் இருக்கு ரகு. இப்போ நம்ம வீட்டுப் பிள்ளையோட எதிர்காலம் முக்கியம்," என்றார் விஸ்வநாதன்.

அடுத்த சில மாதங்கள் அந்த குடும்பம் மிகவும் சிக்கனமாக வாழ்ந்தது.வெளியூர் சுற்றுப்பயணங்கள்தவிர்க்கப்பட்டன. ஆடம்பரச் செலவுகள் குறைக்கப்பட்டன. ஆனால், ஒரு வேளை உணவு கூட யாரும் தனியாகச் சாப்பிடவில்லை. கஷ்டம் வந்தபோது அந்த குடும்பம் இன்னும் நெருக்கமானது.

ஆகாஷ் இதையெல்லாம் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நபர் செய்த தவறுக்கோ அல்லது அவருக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டத்திற்கோ மொத்தக் குடும்பமும் பொறுப்பேற்றுச் செயல்படுவதை அவன் தன் அலுவலகச் சூழலில் கண்டதே இல்லை.

ஒரு நாள் இரவு உணவின் போது, ஆகாஷ் கேட்டான், "பெரியப்பா, உங்களுக்கு ரகு சித்தப்பா மேல கோபம் வரலையா? அவரோட கவனக்குறைவால கூட இந்தத் தீ விபத்து நடந்திருக்கலாம்ல? நீங்க ஏன் உங்க பணத்தையும் உழைப்பையும் அவருக்காகச் செலவு பண்றீங்க?"

விஸ்வநாதன் புன்னகையோடு சொன்னார், "ஆகாஷ், ஒரு கை விரல்ல காயம் பட்டா, கையை வெட்டியா எறிஞ்சிருவோம்? இல்லையே... மருந்து போட்டுத் தேத்துவோம்ல? அதுபோலத்தான் குடும்ப மும். ஒருத்தர் தடுமாறும்போது மத்தவங்க தாங்கணும். இன்னைக்கு ரகுவுக்குக் கஷ்டம், நாளைக்கு எனக்கு வரலாம். அப்போ ரகு எனக்காக நிப்பாருன்னு எனக்குத் தெரியும். இது வியாபாரம் இல்லை ஆகாஷ், இதுதான் 'கூட்டுக் குடும்பம்'."

ஆண்டுகள் உருண்டோடின. ரகுவின் கடை முன்பை விடப் பிரம்மாண்டமாக வளர்ந்தது. அவர் இழந்த அனைத்தையும் மீட்டெடுத்தார். அது பொங்கல் பண்டிகை காலம். 'லட்சுமி நிவாஸ்' வீடே விழாக்கோலம் பூண்டிருந்தது.

வெளியூரில் இருந்த மகள்கள், மாப்பிள்ளைகள், பேரக் குழந்தைகள் என வீடு முழுக்க மனிதர்கள். வாசலில் பெரிய கோலம், மாவிலைத் தோரணம் என அந்த வீடே களைகட்டியது.

அனைவரும் ஒன்றாக அமர்ந்து கரும்பைச் சுவைத்துக் கொண்டிருந்தனர். சிவராமன் ஐயா ஊஞ்சலில் அமர்ந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஜானகி அம்மாள் அவரிடம் வந்து, "என்னங்க, என்ன யோசனை? முகத்துல ஒரு திருப்தி தெரியுது?" என்றார்.

"ஆமா ஜானகி. இந்த உலகத்துல எவ்வளவோ செல்வங்கள் இருக்கலாம். ஆனா, ஒருத்தரோட ஒருத்தர் அன்பா இருக்குற இந்த மனித உறவுகள் இருக்கே... அதுதான் உண்மையான சொத்து. இன்னைக்குக் காலையில ஆகாஷ் என்கிட்ட வந்து என்ன சொன்னான் தெரியுமா?"



"என்ன சொன்னான்?"

"அவன் வேலை பார்க்குற இடத்

துல பெரிய சம்பளத்துல வெளிநாட்டு வேலை கிடைச்சதாம். ஆனா அதை அவன் வேணாம்னு சொல்லிட்டானாம். 'தாத்தா, நான் இங்கேயே ஏதோ ஒரு வேலை செஞ்சுக்குறேன். ஆனா இந்த மாதிரி ஒரு அன்பான குடும்பத்தை விட்டுட்டுத் தனியா என்னால இருக்க முடியாது'ன்னு சொன்னான். அவன் ஒரு மென்பொருள் பொறியாளனா ஜெயிச்சதை விட, ஒரு நல்ல குடும்பத் தலைவனா வளர்ந்து நிக்கிறதை நினைச்சா எனக்குப் பெருமையா இருக்கு," என்றார் சிவராமன்.

கூட்டுக் குடும்பம் என்பது வெறும் மனிதர்களின் தொகுப்பு அல்ல; அது ஒருபல்கலைக்கழகம். அங்கே சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் நிபந்தனையற்ற அன்பு ஆகிய பாடங்கள் கற்றுத்தரப்படுகின்றன.

வேர்கள் ஆழமாக இருந்தால் தான் மரம் உறுதியாக இருக்கும். அதேபோல், குடும்ப உறுப்பினர் களுக்கிடையேயான பிணைப்பு ஆழமாக இருந்தால், எந்தப் புயலையும் அந்தத் தார்மீக பலத்தோடு எதிர்கொள்ள முடியும்.

'லட்சுமி நிவாஸ்' வீட்டின் விளக்கு என்றும் அணையாமல் எரிந்து கொண்டிருந்தது. அது வெறும் ஒளியல்ல; அங்கே வாழும் இதயங்களின் அன்புச் சுடர்.

காலத்தின் சுழற்சியில் 'லட்சுமி நிவாஸ்' இன்னும் பல மாற்றங்களைக் கண்டது. விஸ்வநாதனின் மகன் அரவிந்துக்கும், ரகுவின் மகள் திவ்யாவிற்கும் திருமண ஏற்பாடுகள் நடந்தன. ஒரே வீட்டில் வளரும் அண்ணன் தம்பி பிள்ளைகள் என்பதால், அந்தத் திருமணங்கள் அந்த வீட்டின் ஒற்றுமையை உலகுக்கே பறைசாற்றின.

ஒரு நாள் மாலை வேளையில், வீட்டின் தோட்டத்தில் சிவராமன் உலாவிக் கொண்டிருந்தார். இப்போது அவருக்கு வயது 85. நடை தளர்ந்திருந்தாலும், குரலில் அதே கம்பீரம் குறையவில்லை. அவருடன் அவர் கொள்ளுப் பேரன் வருண் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது ஆகாஷ் அவரிடம் வந்து அமர்ந்தான். அவன் இப்போது ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் உரிமையாளர். "தாத்தா, நீங்க அன்னைக்குச் சொன்னது எவ்வளவு உண்மைன்னு இப்பதான் புரியுது. என் பிசினஸ்ல பார்ட்னர்ஷிப் பிரச் சனைவந்தப்போ, மத்தவங்க எல்லாரும்கோர்ட், கேஸ்னு போகச் சொன்னாங்க. ஆனா அப்பாதான் சொன்னாரு, 'அன்பால எதையும் பேசித் தீர்க்கலாம்'னு. அதே மாதிரி செஞ்சேன், இன்னைக்கு நாங்க பிரிஞ்சு போகாம இன்னும் பெரிய லெவல்ல வளர்ந்திருக்கோம்," என்றான்.

சிவராமன் சிரித்துக்கொண்டே, "ஆகாஷ், குடும்பம்ங்கிறது ஒரு போர்வை மாதிரி. அது நம்ம மேல இருக்குற வரைக்கும் குளிரும் தெரியாது, வெயிலும் தெரியாது. ஆனா அதை உதறிட்டுத் தனியா நின்னாதான் வெளிய இருக்குற கரடுமுரடான உலகம் புரியும்," என்றார்.

திடீரென ஜானகி அம்மாளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நவீன காலத்தில் கணவன்



மனைவி மட்டும் இருக்கும் குடும்பங்களில் இது போன்ற நேரங்களில் வேலையை விடுவதா அல்லது நோயாளியைக் கவனிப்பதா என்ற பெரிய குழப்பம் வரும். ஆனால் இங்கே அந்தப் பிரச்சனையே எழவில்லை.

மூத்த மருமகள் மீனா மருத்துவமனையில் ஜானகியோடு தங்கினாள். கவிதா வீட்டின் சமையலையும், மற்ற குழந்தைகளையும் கவனித்துக் கொண்டாள். மகன்கள் மாறி மாறி மருந்துகள் வாங்கவும், மருத்துவர்களுடன் பேசவும் ஓடினர்.

மருத்துவமனையில் ஜானகி அம்மாளைப் பார்க்க வந்த பக்கத்து வீட்டுக்காரர் ஆச்சரியப்

பட்டார். "என்ன ஜானகி, உங்களுக்கு இவ்வளவு சீக்கிரம் குணமாகிடுச்சு? உங்க குடும்பமே இங்கதான் இருக்கு போல!"

ஜானகி அம்மாள் பலவீனமான குரலில் ஆனால் பெருமையுடன் சொன்னார், "என் மருமகள்கள் எனக்குத் தரும் அன்புதான் எனக்குப் பாதி மருந்து. அவங்க கையால ஒரு வாய் கஞ்சி குடிச்சா போதும், எனக்கு எல்லா வலியும் போயிடும். இதெல்லாம் கொடுத்து வைக்கணும்,"

ஒரு நாள் இரவு, நிலாச் சோறு சாப்பிடும் நேரத்தில் அனைவரும் மொட்டை மாடியில் அமர்ந்திருந்தனர். இது அந்த வீட்டின் நீண்ட கால வழக்கம். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை வட்டமாக அமர்ந்து பேசுவார்கள்.

பாஸ்கர் கேட்டார், "அப்பா, இவ்வளவு பெரிய குடும்பத்தை இத்தனை வருஷம் ஒண்ணா வச்சிருக்கிறதுக்கு நீங்க ஏதாவது ஒரு சீக்ரெட் வச்சிருக்கீங்களா?"

சிவராமன் அனைவரையும் ஒரு முறை ஆழமாகப் பார்த்தார். "ரகசியம் ஒண்ணும் இல்லை பாஸ்கர். மூணு விஷயம்தான்.

* செவிசாய்த்தல்: மத்தவங்க என்ன சொல்றாங்கன்னு காது கொடுத்துக் கேளுங்க.
* மன்னித்தல்: மனுஷங்கன்னா தப்பு செய்வாங்க. அதை மனசுல வச்சுக்காம அப்பவே மன்னிச்சுடுங்க.
* பகிர்ந்துகொள்ளுதல்: சாப்பாட்டை மட்டும் இல்லை, உங்க கவலைகளையும் சந்தோஷத்தையும் பகிர்ந்துக்கோங்க.

இந்த மூணும் இருந்தா எந்தக் குடும்பமும் உடையாது. நாம சம்பாதிக்கிற பணம் பேங்க்ல இருக்கும், ஆனா நாம சம்பாதிக்கிற மனுஷங்க தான் நம்ம வாழ்க்கை முழுக்கக் கூட இருப்பாங்க."

அன்றிரவு, ஆகாஷ் தனது டைரியில் ஒரு வரியை எழுதினான்: "தனிமை சுதந்திரத்தைக் கொடுக்கலாம், ஆனால் கூட்டுக் குடும்பம் மட்டும்தான் பாதுகாப்பையும், வாழ்நாள் முழுமைக்குமான அர்த்தத்தையும் கொடுக்கிறது."

சிவராமனின் 'லட்சுமி நிவாஸ்' வெறும் வீடாக இல்லாமல், பாசம், பண்பாடு மற்றும் பாரம்பரியத்தின் ஒரு நித்திய ஆலயமாக ஒளிவீசிக் கொண்டிருந்தது. அடுத்த தலைமுறை குழந்தைகள் அங்கே வேரூன்றி, கிளை பரப்பத் தயாராக இருந்தனர்.

– மாலதி சந்திரசேகரன்

www.panmugam.com
பன்முகம் .காம்

ஆசிரியர், வெளியீட்டாளர்
மகாலட்சுமி
MahaLakshmi
Cell: 9337501889

முதன்மை செய்தியாளர்
Rakesh, C.N.Rajan

துணை ஆசிரியர்கள்
Tina, Arulmozhi,
Thenuka

வடிவமைப்பு
SML GRAPHICS Ph:9444228203

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar
Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
7789941009

இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழ் முழுவதும் இணையதளத்தையும், வலைதளங்களையும் சார்ந்தே திரட்டப்படும் செய்திகளை ஒழுங்குப்படுத்தி தரப்படும் தன்னிகரில்லா இதழாகும், இந்த தளத்தில் வெளிவரும் செய்திகள், விளம்பரங்கள் புகைப்படங்கள் அனைத்தையும் எந்தவித லாபநோக்கமின்றி தொகுக்கப்பட்டு நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி வாசகர்களின் பார்வைக்கு கொடுக்கும் சிறப்பான ஒரு சேவையை செய்துவருகிறோம். இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி இணையதள சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.

அட்டையில்:
நிவேதா பெத்துராஜ்

# திரிபலா எனும் மருந்தின் சிறப்புகள்

நோய் வந்தபின் சிகிச்சை மேற்கொள்வது, 2.நோய் வரும் முன் தற்காத்துக் கொள்வது இந்த இரண்டு வழிகளிலும் திரிபலா உதவுகிறது.

திரிபலா என்பது நமது பாரம்பரிய ஆயுர்வேத முறையின் சிறப்பான மருந்தாகும். இது ஒரு ரசாயனியாகவும் = (என்றும் இளமையாக இருக்கும் படியாக உடலைப் பேணி காக்கும் மருந்து), காயகல்பமாகவும் செயல்படுகிறது.

திரிபலா என்பது

1.நெல்லிக்காய் (Emblicaofficinalis),

2.கடுக்காய் (Terminalia chebula)

3.தான்றிக்காய் (Terminalia belerica) எனும் இந்த மூன்று மூலிகைகள் சேர்ந்த கூட்டு பொருள் ஆகும்.

திரிபலா எனும் இம் மருந்து ஆயுர்வேத மருத்துவர்களால், உலகம் முழுவதும்பரவலாக எல்லா நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப் படுகின்றது.

முக்கியமாக இம்மருந்து மலச்சிக்கல், கண் நோய்கள், கல்லீரல் பிணிகள், நுரையீரல் புண், உடல் பருமன், தலைமுடி கோளாறுகள், வயிற்று பிரச்சினை, நீரிழிவு, மூட்டுவலி, வாய் துவாரம் முதல் ஆசனவாய் வரையிலும் உள்ள புண்கள், இரத்தம் மாசு படுதல், ஆஸ்துமா, மஞ்சள் காமாலை, மூலம் நோய் இவைகளுக்கெல்லாம் நிவாரணம் அளிக்கும் தீர்வாக உள்ளது, மேலும் புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலை கொண்டது.

"சரக சம்ஹிதா "என்னும் ஆயுர்வேத நூலில் முதல் அத்தியாயத்திலேயே திரிபலாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதே இம்மருந்தின் முக்கியத்துவத்தினை அறிவிக்கும் விஷயமாகும்.

திரிபலா எனும் இம்மருந்து நமக்கு முதுமைத் தன்மையை நீக்கி இளமைத் தன்மையை அதிகரிக்கச் செய்யும் சூரணம் ஆகும்.

இது உடல் ஆரோக்கியத்தினை அதிகரிக்க செய்து, நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டவும் உதவுகிறது.

நமது உடலில் இயற்கையாகவே அமைந்திருக்கும் தடுப்பு அரண்களைத் தாண்டி, உடலின் உள்ளே நுழையும் கிருமிகளை எதிர்த்துப் போராடும் 'ஆன்டிபாடி' (antibodies) எனப்படும் நோய் எதிர்ப்பு சக்திகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய இந்த திரிபலா சூரணம் உதவுகிறது.

உடலில் செல்களுக்கிடையில் நடைபெறும் வளர்ச்சிதை மாற்றத்தில், சக்தி வாய்ந்த ஆன்டி ஆக்ஸிடன்டாக திரிபலா செயலாற்றுகிறது.

நமக்கு முதுமையைத் தரும் முக்கியமான காரணியான "கட்டற்ற காரணிகளை" (free radicals) உற்பத்தி செய்யும் வாய்ப்பைக் குறைக்கிறது.

மேலும் செல்கள் முறையாகச் செயல்படுவதற்கு முக்கியமாகத் தேவைப்படும் மைட்டோகாண்டிரியா, கோல்கை உறுப்புகள், உட்கரு ஆகியவை






சிறப்பாகச் செயல்படுவதையும் திரிபலா தூண்டு கிறது.

நமது உடலின் செரிமானக் கோளாறுகளை திரிபலா அற்புதமாக குணப்படுத்துகிறது.

அதிலும் மிக முக்கியமாக உணவுப்பாதையில் மலத்தினை வெளித்தள்ளும் குடலியக்கத்தை சீராக செயல்பட வைக்கிறது. மேலும் இரத்தத்தில் உள்ள கொழுப்பினை கரைக்க தேவைப்படும் பைல் (Bile) திரவத்தினை கல்லீரலிலிருந்துசுரக்க வும் உதவுகிறது.

உணவுப்பாதையில் தேவையான கார அமில நிலையை (pH level) தேவையான நிலையில் பேணுவதற்கும் துணை புரிகிறது.

திரிபலா ஒரு சிறந்த குடல் சுத்தி கரிப்பானாகச் செயல்படுகிறது. மலச்சிக்கலுக்கு மருத்துவர்களால் மிகவும் அதிகமாகப் பரிந்து ரைக்கப்படும் சிறப்பான மருந்து திரிபலாவாகும்.

உடலிலுள்ள நச்சுப்பொருட்களை நீக்கும் நச்சு நீக்கியாகவும் இது செயலாற்றுகிறது. சிறந்த மலமிளக்கியாகவும் பயன்படுகிறது.

வயிற்றில் பூச்சி வளர்வதையும், தொற்றுக்கள் உறுவாகுவதையும் கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்த மருந்து தான் திரிபலா.

குறிப்பாக வயிற்றிலிருந்து நாடாப்புழுக் களையும், வளையப்புழுக்களையும் வெளியே அகற்றுவதற்கு பெரிதும் உதவுகிறது.

இரத்தத்தில் இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க திரிபலா உதவு கிறது.

இதன் மூலம் இரத்த சோகை என்னும் நோயைத் தீர்க்க முடியும். (இரத்த சோகை என்பது இரத்தத்தில், ஹீமோகுளோபின் எனப் படும் இரத்த சிவப்பு அணுக்களின் அளவு குறைந்து காணப்படும் நிலையாகும்).

திரிபலா சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்து வதில் சிறப்பு மிக்கதாகும்.

நமது கணையத்தினைத் (pancreas) தூண்டி, இன்சுலினை சுரக்கச் செய்கிறது.

கணையத்தில்தான் இன்சுலினைச் சுரக்கும் லாங்கர்ஹான் திட்டுக்கள் (langerhans) எனப்படும் சுரப்பிகள் உள்ளன.

திரிபலா கசப்புச் சுவையுடன் இருப்பதனால், சர்க்கரை நோயின் ஒரு நிலையான ஹைப்பர் கிளைசீமியா (hyperglycemia) எனப்படும் அதிக சர்க்கரை நிலையில், இதனை எடுத்துக் கொள்வது சிறப்பானது.

இயல்பை விட உடல் பருமனானவர்கள், திரிபலாவை உட்கொள்வது மிகவும் பயன்தரும். இதனுடைய மருத்துவக் குணத்தினால் உடலி லுள்ள கொழுப்பின் அளவினைக் குறைக்க முடியும். நமது உடலில் கொழுப்பு படிவதற்குக் காரணமான அடிபோஸ் செல்களைக் குறி வைத்து செயல்படுவதால், கொழுப்பின் அளவு குறைகிறது. இதன் மூலம் உடல் பருமன் கட்டுப் படுத்தப்படுகிறது.

இது இரத்தத்தினைச் சுத்தம் செய்து இரத்தத்திலுள்ள நச்சுப்பொருட்களைவெளியேற் றும் தன்மை கொண்டிருப்பதால், சரும நோய்க ளுக்கான மருத்துவத்தில் பெரும்பங்காற்று கிறது. இரத்தத்தினைச் சுத்திகரிக்கும் தன்மை கொண்டிருப்பதால், தொற்று நோய்களை யும் தீர்க்கும் குணம் கொண்டுள்ளது.

சுவாசப் பாதையிலுள்ள அடைப்புகளை நீக்கி சீரான சுவாசம் ஏற்பட பெரிதும் உதவுகிறது.

| எப்படி சாப்பிடவேண்டும்? | |
|---|---|
| மாதம் | செய்முறை |
| சித்திரை, வைகாசி (இளவேனில் காலம்) | ஆறு பங்கு திரிபலா சூரணம், ஒரு பங்கு திப்பிலி. இந்தக் கலவையை அரைத்துப் பொடியாக்கி, வெதுவெதுப்பான நீரில் கலந்து, அருந்த வேண்டும். |
| ஆனி,ஆடி (முதுவேனில் காலம்) | ஆறு பங்கு திரிபலா சூரணத்தில் ஒரு பங்கு தேன் கலந்து வெதுவெதுப்பான நீரில் அருந்த வேண்டும். |
| ஆவணி, புரட்டாசி (கார் காலம்) | ஆறு பங்கு திரிபலா சூரணத்துடன் ஒரு பங்கு நாட்டு வெல்லம் சேர்த்து வெதுவெதுப்பான நீரில் கலந்து அருந்த வேண்டும். |
| ஐப்பசி, கார்த்திகை (குளிர் காலம்) | ஆறு பங்கு திரிபலா சூரணம், சிறிதளவு இந்துப்பு சேர்த்து, வெதுவெதுப்பான நீரில் கலந்து அருந்த வேண்டும். |
| மார்கழி, தை (முன் பனிக் காலம்) | ஆறு பங்கு திரிபலா சூரணம், ஒரு பங்கு நாட்டு சர்க்கரை சேர்த்த கலவையை வெதுவெதுப்பான நீரில் கலந்து அருந்த வேண்டும். |
| மாசி, பங்குனி (பின் பனிக் காலம்) | ஆறு மடங்கு திரிபலா சூரணத்தை , ஒரு பங்கு சுக்கு பவுடர் சேர்த்து வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து அருந்தவும். |

சைனஸ் என்னும் நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் இது செயல்படுகிறது. மேலும் நமது சுவாசப்பாதையிலுள்ள சளியில் பாக்டீரியாக்கள் வளராமலும் இது தடுக்கிறது.

தலைவலிக்கு நிவாரணமாகவும் திரிபலா பயன்படுகிறது. குறிப்பாக வளர்சிதை மாற்றத்தின் இடையூறுகளால் உண்டாகும் தலைவலிக்கு சிறப்பான நிவாரணத்தை அளிக்கிறது.

புதுடில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட சமீபத்திய ஆய்வுகளின் படி, திரிபலாவுக்கு புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் செல்களில் மைட்டேடிக் நிலையில் ஸ்பிண்டில் வடிவத்தோற்றம் உண்டாவதைக் குறைக்க உதவி செய்கிறது. அதன்மூலம், புற்றுநோய் செல்களில் மெடாஸ்டேடிஸ் (metastasis) வளரும் அபாயத்தையும் குறைக்கிறது.



மிதமான அளவில் இது மலமிலக்கியாகும். அதிகப்படியான பயன் பாட்டில் வயிற்றுப்போக்கு மற்றும் வயிற்று கடுப்பை ஏற்படுத்தும்.

யாரெல்லாம் திரிபலா சாப்பிடக்கூடாது?

கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள், நாட்பட்ட பேதி நோய் உள்ளவர்கள், மெலிந்தவர்கள், ஏற்கனவே குறைந்த அளவு இரத்த அழுத்தம் உள்ளவர்கள் (ஏற்கனவே low pressure உள்ளவர்கள் திரிபலா எடுத்துக் கொண்டால் அவர்களின் இரத்த அழுத்தம் ஆபத்தான அளவுக்கு குறைந்துமை விடும்).

சாப்பிடும் அளவு:

இரவு உணவு எடுத்துக் கொண்ட பின் ஒன்னரை மணி நேரம் கழித்து 2 முதல் 3கிராம் வரை வெந்நீரில் கலந்து சூடு அறிய பிறகு சாப்பிடவும்.

– லால்குடி.வெ.நாராயணன்

# சர்க்கரையாக வாழப்பழகுங்கள்

புதிதாக முடிசூட்டிக்கொண்ட ஓர் இளவரசன் ஒரு நாள் அமைச்சரை அழைத்து, "மக்களின் மனதில் நிற்கும் மன்னனாக நான் இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கிறார்.

அமைச்சர், இளவரசருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று கொஞ்சம் யோசித்தார். சொல்லிப் புரிய வைப்பதைவிட ஒரு சோதனையை நிகழ்த்தி புரிய வைத்தால் நன்றாகப் புரியும் என்று நினைத் தார்.

"சற்றுப் பொறுங்கள் அரசே..." என்று சொல்லி, சிறிது நேரம் கழித்து மூன்று கண்ணாடிக் குவளை களில் நல்ல தண்ணீரைக் கொண்டு வந்து நிரப்பினார். பிறகு அதில் கொஞ்சம் களிமண், பஞ்சு, சர்க்கரை மூன்றையும் தனித்தனியாகப் போட்டார். அதைக் கவனித்துக் கொண்டிருந்த இளவரசருக்கு ஒன்றும் புரியவில்லை.

களிமண்ணோடு கலந்த தண்ணீர் சேறானது.

பஞ்சு முடிந்த அளவு தண்ணீரை உறிஞ்சியது. தன் இயல்பையும் இழந்தது.

சர்க்கரை தன்னை முழுமையாகக் கரைத்து நீரையும் இனிப்பாக்கியது.

பின் அவர் அரசரைப் பார்த்து, "தான் கெட்டு, தன்னோடு சேர்பவர்களையும் கெடுப்பவர்கள் களிமண் போன்றவர்கள்.

தன் இயல்பை இழந்து பிறரையும் உறிஞ் சுபவர்கள் பஞ்சு போன்றவர்கள்.

தன் இயல்பை இழக்காமல் தன்னோடு சேர்பவர்களையும் இனிமையாக மாற்றுபவர்களே சர்க்கரை போன்றவர்கள்.

இந்தச் சர்க்கரை போன்றவர்களைத்தான் இந்தச் சமூகம் விரும்பும். எனவே, மக்கள் மனதில் நிலைத்து நிற்க வேண்டுமானால் சர்க்கரையாக உங்களைக் கரைத்துக் கொள்ளுங்கள். பிறருக்குப் பயன்படுங்கள். மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்." என்றார்.

விடை கிடைத்த மகிழ்ச்சியில் பீடு நடை போடத் தொடங்கினான் இளவரசன். இது அந்த இளவரசருக்கு மட்டுமல்ல. அனைவருக்குமான பாடம்தான்.



# மீம்ஸ் கலாட்டா


மாமன் பையன லவ் பன்னா வெளில மாப்ள பார்த்து கட்டி வைக்கிறிங்க
சரினு வெளில எவனையாச்சும் லவ் பன்னா மாமன் மகன கட்டி வக்கிரிங்க என்னங்கடா உங்க பிரச்சனை 😏😏


திடீர்னு பூமி சுத்துறது நின்னுட்டா என்ன ஆகும்..?
நீதான் நல்லா உருட்டுவீயே...போயி உருட்டி விடு 😂🤣


*others : மத்தவங்க மனசு கஷ்டப்படுற மாதிரி பேசக்கூடாதுன்னு உங்க வீட்டுல சொல்லி தரலயா?
*others
*me
*me : மத்தவங்க நம்மகிட்ட எப்படி பேசுறாங்களோ அப்படியே பேசுன்னு சொல்லி குடுத்துருக்காங்க.. 🤷
அன்பா மட்டும் பேச நாம ஒன்னும் புத்தர் இல்லை 🤷😏😎


மீ -- கூலி படத்துக்கு போலாமா நந்தினி
நீயே இன்னும் மாசம் 10000 ரூபாய்க்கு கூலி வேலைதான் பாக்குற அம்பி அத உருப்படியா பாரு

# வாழும் வாழ்வின் நோக்கம் என்ன?

வாழ்க்கைன்னா என்னப்பா? அப்படின்னு கேட்டா, பாதி பேரு "நல்லா தின்னுட்டு தூங்கிட்டு, ஜாலியா இருக்கிறதுதான்"னு சொல்வாங்க. ஆனா, இந்த ரால்ப் வால்டோ எமர்சன் அப்படிங்கிற பெரிய மனுஷன் என்ன சொல்றாருன்னா, நாம வெறும் சந்தோஷத்தை மட்டும் தேடி அலையுறது ஒரு மண்ணாங்கட்டிக்கும் உதவாதுன்னு ரொம்ப நாசூக்கா சொல்றாரு.

"The purpose of life is not to be happy. It is to be useful, to be honourable, to be compassionate, to have it make some difference that you have lived and lived well.”

எமர்சன் சொல்ல வர்ற அந்த ஒரு வரி இருக்கே, அதுதான் வாழ்க்கையோட அஸ்திவாரமே."வாழ்க்கைன்னா ஜாலியா இருக்கிறது மட்டும் இல்லப்பா, அது மத்தவங்களுக்குப் பிரயோஜனமா இருக்குறதுலதான் இருக்கு"ன்னு அவரு சொன்னது, இன்னைக்கு இருக்குற இந்த அவசர உலகத்துக்கு ரொம்ப முக்கியம்.

இப்போ இருக்குற காலத்துல நாம எல்லாரும் எப்படா வீக்கெண்ட் வரும், எப்போ ஒரு பார்ட்டி பண்ணலாம், இல்லன்னா எந்த ஹோட்டல்ல ஒரு பிரியாணி சாப்பிடலாமான்னு வெறும் தற்காலிகமான சந்தோஷத்தைத் தேடியே ஓடிக்கிட்டு இருக்கோம்.

ஆனா எமர்சன் என்ன சொல்றாருன்னா, இந்த மாதிரி வர்ற சந்தோஷம் எல்லாம் ஒரு மழை பெய்ஞ்சு நிக்கிற மாதிரிதான், வந்த வேகத்துல காணாமப் போயிரும். ஆனா நீ ஒரு நேர்மையான மனுஷனா, மத்தவங்க கஷ்டப்படும்போது கை கொடுக்கிறவனா, உன் மனசாட்சிக்கு பயந்து வாழுறவனா இருந்தேன்னா, அந்தத் திருப்தி இருக்கு பாத்தியா, அதுதான் உன்னை ஒரு முழு மனுஷனா மாத்தும். .

அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயமும் இருக்கு. "நீ வாழ்ந்ததுனால இந்த உலகத்துல ஒரு சின்ன மாற்றமாவது நடக்கணும்" அப்படின்னு சொல்றாரு. இதுக்கு நாம ஏதோ பெரிய உலகத் தலைவர் ஆகணும்னு அவசியமே இல்லை.

நம்ம வீட்டுக்கு பக்கத்துல இருக்குறஒரு பசியால வாடுற மனுஷனுக்கு ஒரு வேளை சாப்பாடு வாங்கித் தரது, ஒரு சின்ன குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறது, இல்லன்னா நம்ம வேலையை எந்த லஞ்சமும் இல்லாம நேர்மையா செய்யுறது இப்படிப்பட்ட சின்னச் சின்ன விஷயங்களே பெரிய மாற்றம் தான். இதத்தான் இவரு "Honourable and Compassionate" அதாவது கண்ணியமும்



கருணையும்னு ரொம்பப் பெரிய விஷயம்

நாம சேர்த்த காசு பணம் எல்லாம் நம்ம கூட வராது, ஆனா நாம மத்தவங்களுக்குச் செஞ்ச நல்ல விஷயங்கள் மட்டும்தான் "நாம வாழ்ந்தோம்" அப்படிங்கிற ஒரு சுவடை இந்த பூமியில விட்டுட்டுப் போகும். எமர்சனோட இந்த ஐடியா படி பார்த்தா, சந்தோஷம்ங்கிறது நாம தேடிப் போக வேண்டியது இல்ல, நாம ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ ஆரம்பிச்சா, அதுவே நம்மள தேடி வந்து பின்னாடியே நிக்கும்.

அப்புறம் இந்த எமர்சன் யாருன்னு கேட்டீங்கன்னா, சுருக்கமா சொல்லப்போனா இவரு அமெரிக்காவோட ஒரு "பெரிய தலை" அப்படின்னே சொல்லலாம். 19வது நூற்றாண்டுல வாழ்ந்த இவரு, வெறும் எழுத்தாளர் மட்டும் கிடையாது, ஒரு சிந்தனையாளர் மற்றும் கவிஞர். அமெரிக்காவோட அறிவார்ந்த வளர்ச்சிக்கு இவரு ஒரு முக்கியமான தூண் மாதிரி இருந்திருக்காரு.

இவரு படிச்சதெல்லாம் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்துல, ஆனா அங்க சொல்லிக் கொடுக்கிற புத்தக அறிவை விட, மனுஷனோட சுயசிந்தனைக்கும், இயற்கையோடு கலந்து வாழ்றதுக்கும் தான் இவரு ரொம்ப முக்கியத்துவம் கொடுத்தாரு. இவரைப் பத்தி சொல்லணும்னா, இவரு "டிரான்ஸெண்டெண்டலிசம்" (Transcendentalism) அப்படிங்கிற ஒரு பெரிய தத்துவ இயக்கத்தையே முன்னெடுத்து நடத்தினவரு.

அது என்னப்பா அப்படின்னு கேட்டா, ரொம்ப சிம்பிள் மனுஷங்க எல்லாரும் இயல்பாவே நல்லவங்கதான், நாம எல்லாரும் கடவுளோட ஒரு அம்சம், அதனால மத்தவங்க சொல்றதைக் கேட்டு ஆடுறதை விட, நம்ம மனசாட்சி சொல்றதைக் கேட்டு நடக்குறதுதான் பெரிய விஷயம்னு அடிச்சுச் சொன்னவரு.

இவரு எழுதின "Self-Reliance" (தன்னம்பிக்கை) அப்படிங்கிற கட்டுரை உலகப்புகழ் பெற்றது. அதுல என்ன சொல்றாருன்னா, "உன்னையே நீ நம்பு, மத்தவங்களோட நிழல்ல வாழாதே"ன்னு ரொம்ப தைரியமா சொல்லியிருப்பாரு.

இவரோட எழுத்துக்கள் எல்லாமே ஒரு மனுஷன் எப்படித் தன்மானத்தோடும், சுய மரியாதையோடும், மத்தவங்களுக்குப் பிரயோஜனமாவும் வாழணும்ங்கிறதைச் சுத்தியே இருக்கும். நம்ம ஊரு பாரதியார் எப்படி முற்போக்குக் கருத்துக்களைப் பேசினாரோ, அதேபோல அமெரிக்காவுல அந்த காலத்துலயே ரொம்ப புரட்சிகரமான கருத்துக்களைப் பேசினவரு இந்த எமர்சன்.

ஒரு காலத்துல சர்ச்ல வேலை பார்த்தவரு, அங்க இருக்கிற சில சடங்குகள் பிடிக்காம வெளியே வந்து, ஊர் ஊரா போய் சொற்பொழிவு பண்ணி மக்களைச் சிந்திக்க வச்சாரு. மொத்தத்துல சொல்லப்போனா, எமர்சன் ஒரு உண்மையான தேடல் உள்ள மனுஷன், அவரோட தத்துவங்கள் இன்னைக்கும் பல பேருக்கு வாழ்க்கையில ஒரு டார்ச் லைட் மாதிரி வழிகாட்டிக்கிட்டு இருக்கு.

இவரோட கருத்துக்கள் நம்ம ஊரு காந்திஜி, மார்ட்டின் லூதர் கிங் போன்ற பெரிய தலைவர்களுக்கே ஒரு பெரிய இன்ஸ்பிரேஷனா இருந்துச்சுன்னா பார்த்துக்கோங்களேன்.

வாழ்க்கையை வெறும் கொண்டாட்டமா பார்க்காம, அதை ஒரு கடமையாவும், மத்தவங்களுக்குப் பயனுள்ளதாவும் மாத்தணும்னு சொன்ன அந்த மனுஷன், 1882ல காலமானாரு. ஆனா இன்னைக்கும் அவரோட எழுத்துக்கள் மூலமா நம்ம மத்தியில ஒரு பெரிய ஹீரோவா வாழ்ந்துகிட்டு இருக்காரு.

நீங்க ஒருத்தருக்குக் காட்டுற கருணை, உங்க வேலையில நீங்க காட்டுற நேர்மை, இதெல்லாம் தான் நீங்க இந்த உலகத்துல வாழ்ந்ததுக்கான ஒரு அத்தாட்சியா இருக்கும்.

இந்த பதிவு உங்களுக்குப் பிடிச்சிருந்தா ஒரு சின்ன கமெண்ட் தட்டிவிடுங்க, அப்படியே உங்க நண்பர்களுக்கும் ஷேர் பண்ணுங்க நீங்க காட்டுற இந்த அன்புதான் எனக்கு அடுத்தடுத்த பதிவுகளை எழுத ஒரு பெரிய உத்வேகமா இருக்கும்






# உலகிற்கே தெரியாமல் நடந்த 'ஆபரேஷன் என்டேபே'

எதிரி நாட்டுக்குள் புகுந்து 90 நிமிஷத்தில் உலகையே அதிரவைத்த 'ஆபரேஷன் என்டேபே' உண்மைக் கதை உங்களுக்கு தெரியுமா?"?

ஒரு பக்காவான 'ஆக்ஷன் த்ரில்லர்' கதை, 1976க்கு ஒரு ரவுண்டு போயிட்டு வந்துருவோம்.

ஆபரேஷன் என்டேபே (Operation Entebbe)

ஒரு அதிரடி ஆட்டம்

கதை ஆரம்பிக்கிறது ஜூன் 27, 1976ல. இஸ்ரேல்ல இருக்குற டெல் அவிவ்ல இருந்து ஏர் பிரான்ஸ் பிளேன் கிளம்புது. உள்ள இருக்குற பயணிகள் எல்லாம் விண்டோ சீட்ல இருந்து வெளில தெரியுற மேகத்தை பார்த்துட்டு வர்றாங்க.

பிளேன் கிரீஸ் நாட்டுல தரை இறங்கி கிளம்பும்போதுதான் வில்லன் என்ட்ரி நாலு பயங்கரவாதிகள் (ரெண்டு பாலஸ்தீன குரூப், ரெண்டு ஜெர்மன் குரூப்) துப்பாக்கியை காட்டி பிளேனையே கடத்திட்டாங்க. "இப்ப இந்த பிளேன் எங்க கண்ட்ரோல் வந்துடுச்சு "னு மிரட்டி, நேரா உகாண்டா நாட்டுல இருக்குற என்டேபே ஏர்போர்ட்டுக்கு கொண்டு போய் இறக்குறாங்க.

அப்ப அங்க இருக்குற அதிபர் இடி அமீன் அவரு ஒரு விசித்திரமான கேரக்டர். "நான்தான்யா இங்க பெரிய மனுஷன்"னு சீன் போடுற நம்ம டிரம்ப் மாதிரி ஆளு, கடத்தல்காரர்களுக்கு ஃபுல் சப்போர்ட் பண்றாரு. அந்த பழைய ஏர்போர்ட் பில்டிங்ல எல்லா பயணிகளை அடைச்சு வச்சுட்டு ஒரு வேலையை பண்றாங்க. யூதர்களையும் இஸ்ரேல் காரங்களையும் மட்டும் தனியா பிரிச்சுட்டு, மத்தவங்களை ரிலீஸ் பண்றாங்க. "எங்க ஆளுங்க 53 பேரை ஜெயில்ல இருந்து விடுதலை பண்ணலன்னா, ஜூலை 4ஆம் தேதி காலையில இஸ்ரேல் காரங்களை ஒவ்வொருத்தரா சுட்டுத் தள்ளுவோம்"னு ஒரு கெடு வைக்கிறாங்க.

இஸ்ரேல் கவர்மெண்டுக்கு அப்போ செம டென்ஷன். ஒரு பக்கம் பேச்சுவார்த்தை நடத்துற மாதிரி வெளிய சீன் காட்டிக்கிட்டு, உள்ளுக்குள்ள 'மொசாட்' (Mossad) உளவுப்படை மாஸ் பிளான் போடுறாங்க. அந்த ஏர்போர்ட்டை கட்டுனதே ஒரு இஸ்ரேல் கம்பெனிதான்.

அவங்ககிட்ட இருந்து ப்ளூபிரிண்ட் மேப்பை வாங்கி, அதே மாதிரி ஒரு செட் போட்டு கமாண்டோக்களுக்கு ட்ரைனிங் கொடுக்குறாங்க. "4,000 கிலோமீட்டர் பறந்து போகணும், அதுவும் மத்த நாட்டு ரேடார்ல சிக்காம தரை இறங்கணும்" இதுதான் மிஷன்

இதுக்கு முன்னாடி நம்ம இடி அமீன், இந்த கடத்தல் நாடகம் நடந்துட்டு இருந்தப்போ, அவரு

அடிக்கடி அந்த பிணையக்கைதிகள் இருக்கிற இடத்துக்கு வருவாரு. வந்துட்டு, "பார்த்தீங்களா, நான் மட்டும் இல்லன்னா இவங்க உங்களை இப்போதே போட்டுத் தள்ளிருப்பாங்க, நான்தான் உங்களை காப்பாத்திட்டு இருக்கேன்"னு அவங்ககிட்டயே சீன் போடுவாரு.

அதுமட்டும் இல்லாம, இஸ்ரேல் கவர்மெண்ட் கிட்ட "நான்தான் இங்க பெரிய மனுஷன், என்கிட்ட பேசுங்க"ன்னு கெத்து காட்டுவாரு. ஆனா உள்ளுக்குள்ள கடத்தல்காரர்களுக்கு தேவையான சாப்பாடு, தண்ணி, துப்பாக்கி எல்லாத்தையும் சப்ளை பண்ணிட்டு இருந்தது அவரோட ஆளுங்கதான்.

ஜூலை 3, ராத்திரி நேரம். நாலு சி130 போர் விமானங்கள் சத்தமே இல்லாம என்டேபே ஏர்போர்ட்ல தரை இறங்குது.

பிளேன்ல இருந்து முதல்ல ஒரு கருப்பு மெர்சிடிஸ் கார் பந்தாவா வெளிய வருது. போலி இடி அமீன் மாதிரியே வேஷம் போட்டுட்டு கமாண்டோக்கள் போறாங்க.

ஆனா, இடி அமீன் இப்போ வெள்ளை மெர்சிடிஸ் கார் வச்சிருக்காருன்னு ஒரு சின்ன ட்விஸ்ட் அங்க வெயிட் பண்ணுச்சு. செக் யூரிட்டிக்கு டவுட் வரவும், சண்டை சும்மா தெறிக்க ஆரம்பிச்சிருச்சு. கமாண்டோக்கள் மின்னல் வேகத்துல பில்டிங் உள்ள புகுந்து, மெகாபோன்ல "நாங்க இஸ்ரேல் ஆர்மி, எல்லாரும் தரையில படுங்க"னு கத்துறாங்க. வெறும் 30 நிமிஷத்துல 7 கடத்தல்காரங்களையும் போட்டு தள்ளிட்டாங்க.

ஆனா ஒரு சின்ன சோகம், இந்த சண்டை யில கமாண்டோ படைத் தளபதி யோன தன் நெதன்யாகு (இப்ப இருக்கிற அதிபர் பெஞ்சமின் நெதன்யாகுவோட அண்ணன்) வீர மரணமடைஞ் சாரு.

மத்த 100க்கும் மேற்பட்ட பயணிகளைபத்திரமா பிளேன்ல ஏத்துனாங்க. கிளம்பும் போது உகாண்டா ராணுவம் பின் னாடி வந்துடக்கூடாதுன்னு அங்க இருந்த அவங்க ளோட போர் விமானங்கள் எல்லாத்தையும் வெடி வச்சு தகர்த்துட்டு, கெத்தா இஸ்ரேல் வந்து இறங்குனாங்க.

இந்த செய்தி தெரிஞ்சதும் உலகமே வாய டைச்சு போச்சு அமெரிக்கா "வெரி குட்"னு சொல்லுச்சு, ஆனா ஆப்பிரிக்க நாடுகள் "என் னடா என் ஊருக்குள்ள பர்மிஷன் இல்லாம வருவீங்க?"னு ஐநா சபையில பஞ்சாயத்தை கூட்டிச்சு.

இடி அமீன் வந்த ஆத்திரத்துல ஹாஸ்பிட டல்ல இருந்த ஒரு வயசான இஸ்ரேல் பாட்டியை கொன்னு தன்னோட குரூரத்தை காட்டினாரு. இந்த ஒரு ஆபரேஷன், இஸ்ரேல் ஆர்மியோட கெத்தை உலகத்துக்கே சொல்லுச்சு. அண் ணனை இழந்த அந்த துக்கம்தான் பின்னாடி பெஞ்சமின் நெதன்யாகுவை ஒரு பெரிய அரசியல் தலைவனா மாத்துச்சு.

ட்விஸ்ட் 1:

இஸ்ரேல்ல இருந்து உகாண்டா போயிட்டு வர்றதுக்கு பிளேன்ல பெட்ரோல் பத்தாது. நடுவுல எங்கயாவது பெட்ரோல் போடணும். ஆனா ஆப்பிரிக்க நாடுகள் எதுவும் இஸ்ரேலுக்கு உதவி பண்ணாது. அங்கதான் கென்யா நாடு சீக்ரெட்டா உதவி பண்ணுச்சு.

நைரோபி ஏர்போர்ட்ல இஸ்ரேல் பிளேன் பெட்ரோல் போட கென்யா அனுமதி கொடுத்துச்சு. இது தெரிஞ்ச உடனே இடி அமீன் கடுப்பாகி, கென்யாவுல இருந்த நூத்துக்கணக்கான ஆட்களை கொன்னுட்டாரு. ஒரு நாடே இன் னொரு நாட்டுக்கு உதவுறதுக்காக இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்தது பெரிய விஷயம்.

ட்விஸ்ட் 2:

இந்த கதையில ஒரு சோகமான ட்விஸ்ட் இருக்கு. 74 வயசான டோரா பிளாக் அப்படி ங்கிற பயணிக்கு உடம்பு முடியாம போனதுனால, அவங்களை மட்டும் ஏர்போர்ட்ல இருந்து லோக்கல் ஹாஸ்பிட்டலுக்கு மாத்திட்டாங்க.

இஸ்ரேல் டீம் வந்து எல்லாரையும் கூட்டிட்டு போயிட்டாங்க, ஆனா இந்த பாட்டி ஹாஸ்பிட டல்லயே மாட்டிக்கிட்டாங்க.

இதனால செம கடுப்பான இடி அமீன், அந்த பாட்டியை கொடூ ரமா பழிவாங்கிட்டாரு. இது பின்னாடி பெரிய சர்வதேச பிரச்சனையா மாறுச்சு.

ட்விஸ்ட் 3

ஐநா சபையில சீன் வேற மாதிரி இருந்துச்சு. ஆப்பிரிக்க நாடுகள் எல்லாம் ஒண்ணா சேர்ந்து, "என்னது இது? ஒரு நாட்டுக்குள்ள இன்னொரு நாட்டு ராணுவம் பர்மிஷன் இல்லாம புகுந்து அடிச்சிட்டு போறதா? இது அந்த நாட்டோட இறையாண்மையை மீறுன செயல்"னு கம்ப்ளையிண்ட் பண்ணாங்க.

ஆனா இஸ்ரேல் தரப்புல இருந்த 'சாம் டான்' அப்படிங்கிற பிரதிநிதி செம பதிலடி கொடுத்தாரு. "எங்க மக்களை கொல்ல மிரட்டுறப்போ, அவங்களை காப்பாத்த எங்களுக்கு உரிமை இருக்கு. இது 'தற்காப்பு' தான்"னு கெத்தா பேசு னாரு.

இந்த ஆபரேஷனை வச்சு இதுவரைக்கும் ஒரு நாலஞ்சு ஹாலிவுட் படமே வந்துருச்சு அதுல '7 Days in Entebbe' அப்படிங்கிற படம் ரொம்ப நல்லா இருக்கும்

# அவர்களால்தான் நாம் இருக்கிறோம்



டெல்லியில் ஒரு பெரிய நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றும் இளம் சுற்றுலாப் பயணி ஒருவர் தனது குடும்பத்துடன் வார விடுமுறைக்காக லடாக் வந்திருந்தார்

அங்கு அவருக்குக் கிடைத்த டிரைவர் சுமார் 28 வயதுடைய இளைஞர்

அவருக்கு வயதான பெற்றோர், மனைவி மற்றும் 2 மகள்கள் இருந்தனர்

பயணத்தில் உரையாடல் தொடங்கியது

பயணி:

“இந்த வார இறுதியில் சுற்றுலா சீசன் முடிந்துவிடும் அதன் பிறகு நீங்கள் என்னசெய் வீர்கள்? கோவா, டெல்லி அல்லது வேறு பெரிய நகரங்களில் ஹோட்டல்களில் வேலைக்கு போவீர்களா?”

இளைஞர்:

"இல்லை, நான் இங்கேயே இருப்பேன் லடாக்கை விட்டு எங்கும் போக மாட்டேன்"

பயணி:

“ஆனால் குளிர்காலத்தில் இங்கே கடும் குளிர் இருக்குமே அப்பொழுது என்ன செய் வீர்கள்?”

இளைஞர்:

“அதிகம் ஒன்றுமில்லை சியாச்சனுக்கு போவேன்”

பயணி (ஆச்சரியத்துடன்):

“சியாச்சனா? அங்கே இங்க விட இன்னும் அதிக குளிர் இருக்குமே”

இளைஞர்:

“அங்கே இந்திய ராணுவத்துக்காக லோட ராக வேலை செய்கிறேன்

ஒப்பந்த வேலை என்னைப்போல சிலர் சேர்ந்து, இங்கிருந்து சியாச்சன் பேஸ் கேம்ப் வரை சுமார் 250 கிலோமீட்டர் நடந்து



செல்வோம், அதற்கு 15 நாட்கள் ஆகும் அங்கே மருத்துவ பரிசோதனை நடக்கும் தகுதி இருந்தால், யூனிஃபாரம், பூட்ஸ், குளிர் ஆடைகள், ஹெல்மெட் வழங்கப்படும் பின்னர் 3 முதல் 4 மாதங்கள் அங்கேயே தங்கி வேலை செய்வோம்.”

பயணி:

“அங்கே நீங்கள் செய்யும் வேலை என்ன?”

இளைஞர்:

“சரக்குகளை சுமப்பது தேவையான அனைத்தையும் ராணுவம் வானிலிருந்து வீசிவிடும் அதை ஒரு போஸ்டிலிருந்து இன்னொரு போஸ்டுக்கு எங்கள் முதுகில் சுமந்து செல்வோம் அந்த முழுப்பகுதியும் பனிப்பாறைகளால் மூடப்பட்டுள்ளது, லாரிகள் அங்கே செல்ல முடியாது ஸ்னோ ஸ்கூட்டர்கள் சத்தம் செய்யும் அது எதிரியின் துப்பாக்கிச் சூட்டை ஈர்க்கலாம் அதனால் இரவு 2 மணியளவில் கிளம்புவோம் டார்ச்சுகள் கூட பயன்படுத்த முடியாது, முழு அமைதியிலும் இருட்டிலும் நடக்க வேண்டும் அங்கே குதிரைகளோ, கழுதைகளோ இல்லை அப்போ மைனஸ் 50 டிகிரி செல்சியஸ் குளிரிலும், 18,000 அடி உயரத்திலும் எந்த விலங்கும் உயிர்வாழ முடியாது”

பயணி (கடுமையான குரலில்):

“அங்கே ஆக்சிஜன் அளவும் குறைவுதானே இவ்வளவு பாரத்தை எப்படி சுமப்பீர்கள்?”

இளைஞர்:

“அதனால் தான் பாரம் ஒருபோதும் 15 கிலோவுக்கு மேல் இருக்காது மேலும் ஒரு நாளைக்கு 2 மணி நேர வேலை மட்டுமே மீதமுள்ள நேரம் உடலை உயிருடன் வைத்திருக்க முயற்சிப்பதிலேயே செல்கிறது”

பயணி:

“இது உயிருக்கு ஆபத்தான வாழ்க்கையே”

இளைஞர் :

சில நிமிடங்கள் அமைதியாக இருந்த பின் “பல நண்பர்கள் திரும்பவே இல்லை சிலர் பள்ளங்களில் விழுந்தார்கள், சிலர் எதிரியின் துப்பாக்கியால் உயிரிழந்தார்கள்

மிகப்பெரிய ஆபத்து ஃப்ராஸ்ட் பைட்



(உறைபனி காயம்)ஞ் ஒரு வகையில் மரணம் தவிர்க்க முடியாததே”

பயணி:

“அப்படியென்றால் உங்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்குமா?”

இளைஞர்:

“மாதம் 18,000 ரூபாய் எல்லா செலவுகளையும் ராணுவம் ஏற்றுக் கொள்கிறது, அதனால் 3 மாதத்தில் சுமார் 50,000 ரூபாய் சேமிக்க முடிகிறது அது போதுமானதே குடும்பத்தை நடத்த உதவுகிறது அதை விட முக்கியமாக, நாட்டுக்கும் ராணுவத்துக்கும் ஏதாவது செய்தோம் என்ற மனநிறைவு கிடைக்கிறது”

டெல்லியிலிருந்து வந்த அந்த சுற்றுலாப் பயணி அமைதியாகி விட்டார்..

ஏசி அலுவலகத்தில், வசதியான வாழ்க்கையுடன், வருடம் 50 லட்சம் சம்பளப் பேக்கேஜில் வாழும் அவர், முதன்முறையாக தன்னை சிறியவராக உணர்ந்தார்

இங்கே மைனஸ் 50 டிகிரி செல்சியஸ் குளிரில், 18,875 அடி உயரத்தில், இரவு 2 மணிக்கு, மரண நிழல் சூழ்ந்த நிலையில் ஒரு நாளைக்கு 600 ரூபா சம்பளம் “பெரிதாக” உணரப்படுகிறது

நாட்டுக்காக ஏதாவது செய்தோம் என்ற உணர்வே வாழ்க்கைக்கு அர்த்தம் தருகிறது

நகரங்களில் உட்கார்ந்து அறிவுரை கூறுபவர்கள், சமூக வலைதளங்களில் விஷம் கக்கும் பலர் அந்த இருட்டான, உறைபனி அமைதியில் 10 நிமிடங்கள்கூட நிற்க துணிவில்லை

நீங்கள் உங்கள் குழந்தையை மாலுக்கு அழைத்துச் சென்று ஷாப்பிங் செய்யலாம், பீட்சா ஊட்டலாம், ஆனால் ஒருநாள் இதையும் அவர்களுக்கு சொல்லுங்க

இந்நாட்டின் உண்மையான முதுகெலும்பு எங்கே இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள

தேசபக்தி என்பது கோஷங்கள் எழுப்புவதோ, விவாதங்களில் ஈடுபடுவதோ மட்டுமல்ல

அது தியாகம், கட்டுப்பாடு, கடமை ஆகியவற்றிலிருந்து பிறக்கிறது என்பதை நாம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்போம்

அடுத்தமுறை நாமொரு வசதியான அறையில் அமர்ந்திருக்கும்போது, ஒரு கணம் நின்று நினைவுகூருவோம்

இரவு 2 மணிக்கு இருட்டிலும் பனியிலும் நமது அமைதிக்காக சுமையை தங்கள் தோள்களில் சுமந்து நிற்பவர்களை ஏனெனில், அவர்கள் இருப்பதால்தான் நாம் இருக்கிறோம்

எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள் உங்களுக்கு கிடைத்திருப்பது போதுமானதே.

# மீம்ஸ் கலாட்டா


ஏங்க நேத்து நைட்டு 11:30 மணிக்கு
பிரட் எடுத்து சாப்பிட்டு இருந்தீங்க...
அவ்வளவு பசியா...?
KUMAR VIDEOS
இல்லம்மா நேத்தோட பிரட்


ShareChat
@jai
கிறிஸ்துமஸ் புது வருடம்
வருவதை முன்னிட்டு எப்படி
உயிர் பிழைப்பது என்பதை
குறித்த அவசர மீட்டிங்


மார்க்கெட்ல இருக்கேன்.
கொழுப்பு கறி
வேணுமா? எலும்பு கறி
வேணுமா?


ஒவ்வொரு வினைக்கும்
எதிர்வினை இருக்கும்......
நீ எனக்கு செய்யும் செயலுக்கு
யாரோ ஒருத்தன் உனக்கு தரமா
....பொது நீதி

# கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்




தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!




தினமும் வெளிவரும் நமது

## தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இணையதள நாளிதழை தொடர்ந்து படியுங்கள், தினமும் நாளிதழில் வெளிவரும் செய்திகள் குறித்து கேள்வி கேட்கப்படும், சரியான பதிலை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பிவைத்தால் குலுக்கல் முறையில் அற்புதமான பரிசுகள் வழங்கப்படும்.

**Whatsup no.8122664699**


சுடச்சுட செய்திகளை
அதிகாலை வேலையில்
தெரிந்துகொள்ள
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
தமிழ்நாடு
இ/பேப்பர்
படியுங்கள்

# 13 வயசு ரியல் ஹீரோ



ஆஸ்திரேலியாவில் நடந்த நெஞ்சை உருக்கும் சம்பவம் நிஜமாவே ஒரு சினிமா படம் மாதிரிதான் இருக்குங்க. மேற்கு ஆஸ்திரேலியாவின் குயிண்டாலப் கடற்கரைக்குத் தன் அம்மா ஜோன், 12 வயசு தம்பி போ மற்றும் 8 வயசு தங்கை கிரேஸ் கூட ஜாலியா பொழுதை கழிக்கப் போன 13 வயசு சிறுவன் ஆஸ்டின் ஆப்பிள்பீ, இன்னைக்கு உலகமே வியந்து பார்க்குற ஒரு மாபெரும் ஹீரோவா மாறியிருக்கான்.

அன்னைக்கு மத்தியானம் ஹோட்டல்ல இருந்து வாடகைக்கு எடுத்த கயாக் மற்றும் பேடில் போர்டுகளை வெச்சுக்கிட்டு கடல்ல விளையாடப் போயிருக்காங்க.

ஆனா விதி யாரை விட்டுச்சு? திடீர்னு பலமா அடிச்ச காத்தும், ஆக்ரோஷமான அலைகளும் அவங்களை நடுக்கடலுக்கு இழுத்துட்டுப் போயிடுச்சு. கிட்டத்தட்ட 14 கிலோமீட்டர் தூரத்துக்கு அவங்க கரை தெரியாம தள்ளப்பட்டிருக்காங்க.

நேரம் ஆக ஆக பயம் தொத்திக்கிச்சு, இருட்ட ஆரம்பிச்ச சூழல்ல தன் குழந்தைகளைத் தனியா விட்டுட்டு தன்னால போக முடியாதுன்னு அம்மா ஜோன் தவிக்க, கடைசியில ஒரு கஷ்டமான முடிவை எடுத்திருக்காங்க.

நீச்சல்ல கில்லாடியான ஆஸ்டினை மட்டும் உதவி தேடி கரைக்கு நீந்திப் போகச் சொல்லியிருக்காங்க. ஆஸ்டின் முதல்ல ஒரு கயாக் படகுலதான் கிளம்பினான், ஆனா அந்தப் படகுல தண்ணி புகுந்து மூழ்க ஆரம்பிச்சதும், துணிச்சலா கடல்ல குதிச்சு நீந்த ஆரம்பிச்சுட்டான்.

நடுவுல நீந்துறதுக்கு இடைஞ்சலா இருக்குன்னு தன்னோட லைஃப் ஜாக்கெட்டைக் கூட கழட்டிப் போட்டுட்டு, "இன்னைக்கு நாம தோத்துறக் கூடாது"ன்னு மனசுக்குள்ளயே சொல்லிக்கிட்டு, சுமார் 4 கிலோமீட்டர் தூரத்தை 4 மணி நேரம் போராடி நீந்திக் கடந்து கரையை வந்து சேர்ந்திருக் கான்.

கரைக்கு வந்ததும் மூச்சு வாங்கிய ஆஸ்டின், அங்கேயே யங்கி விழாம, வேகமா ஓடிப் போய் உதவிக்குத் போன் பண்ணி யிருக்கான். அவன் கொடுத்த தகவலின் பேரில் ஹெலிகாப்டர் மற்றும் படகுகள் கிளம்பிப் போய், நடுங்கிக் கிட்டிருந்த அவங்க அம்மாவையும் தம்பி, தங்கையையும் பத்திரமா மீட்டிருக்காங்க. மீட்புப்படையி னரே ஆஸ்டி னோட இந்தச் செயலை "சூப்பர் ஹியூமன்" அப்படின்னு பாராட்டுறாங்க. இவ்வளவு பெரிய காரியத்தைச் செஞ்ச ஆஸ்டின், "நான் ஒன்னும் ஹீரோ இல்ல, கடவுள்தான் எனக்குத் துணையா இருந்தார்"னு ரொம்ப எளிமையா சொல்றான். பெத்தவங்களுக்காகவும் கூடப் பிறந்தவங்களுக்காகவும் ஒரு 13 வயசுப் பையன் மரணத்தோட போராடி ஜெயிச்ச இந்தச் சம்பவம், நிஜமாவே ஒரு பெரிய உத்வேகம் தான்.

# மருந்தில் மிகப்பெரியமோசடி தலைமுறையை காப்பாற்றிய

# சிங்கப்பெண்

1960ல வாஷிங்டன்ல இருக்குற அந்த மருந்து கட்டுப்பாட்டு ஆபீஸ்க்குள்ள ஒரு சிங்க பெண்மணி எடுத்து வைக்குது, அவங்க பேருதான் டாக்டர் பிரான்சிஸ் கெல்சி. வேலைக் குச் சேர்ந்து முதல் நாளே அவங்க டேபிள்ல ஒரு ஃபைல் வந்து விழுது, அந்த ஃபைல்ல இருந்தது 'தாலிடோமைடு' அப்படிங்கிற ஒரு மருந்து. அவரோட கையெழுத்து அந்த ஃபைலக்கு தேவை

அந்த நேரத்துல ஐரோப்பா முழுக்க அந்த மாத் திரை ஒரு 'மேஜிக் மருந்து' மாதிரி பேசப்பட்டுச்சு, குறிப்பா கர்ப்பமா இருக்குற பெண்களுக்கு வர்ற அந்த வாந்தி, மயக்கம், அப்புறம் தூக்கம் வராம தவிக்கிற கஷ்டத்துக்கு இதுதான் பெஸ்ட்னு எல்லாரும் அடிச்சுக்கிறாங்க.

அந்த மருந்து கம்பெனிக்காரங்க "ஏற்கனவே ஊர் முழுக்க வித்துக்கிட்டு இருக்கோம், கிறிஸ் துமஸ் குள்ள அமெரிக்காவுல கல்லா கட்டணும், சீக்கிரம் கையெழுத்தப் போடுங்கம்மா"ன்னு அவ சரப்படுத்துறாங்க. ஆனா அந்த அம்மா சாதாரண ஆள் இல்ல, அவங்க கண்ணு அந்த ஃபைல்ல இருக்குற ஓட்டையக் கண்டுபிடிச்சிருச்சு.

"எல்லாரும் விக்கிறாங்க சரி, ஆனா இந்த மருந்தால வயித்துல இருக்குற அந்தப் பச்சை மண்ணுக்கு என்ன ஆகும்னு நீங்க சரியா சொல் லலையே?"ன்னு கேட்டு அந்த ஃபைலை தூக்கி எறிஞ்சாங்க.

அவ்வளவுதான், அந்த மருந்து கம்பெனிக் காரங்களுக்கு உச்சந்தலையில கோவம் ஏறிடுச்சு, "எங்ககிட்டயே வேலையைக் காட்டுறியா?"ன்னு இறங்குறாங்க.

அவங்க மேலதிகாரிகளுக்குப் போன் போடுறது, அந்த அம்மாவை "உனக்கு ஒண்ணும் தெரியாது, நீ ஒரு லூசு, நீ ஏதோ பவர்ல இருக்கோம்னு ஆட்டம் போடுற"ன்னு அசிங்கப்படுத்துறதுன்னு இறங்குனாங்க. இன்னைக்கு இருந்தா கூட ஒரு பொண்ணு ஒரு பெரிய கம்பெனியை எதிர்த்து



நிக்கிறது எவ்வளவு கஷ்டம்னு யோசிச்சுப் பாருங்க, அன்னைக்கு 1960ல அந்த சிங்க பெண்மணி சுத்தி இருந்ததெல்லாம் ஆம்பளைங்க அதிகாரம், அவங்க கொடுத்த டார்ச்சர்ல அந்த அம்மா நினைச்சிருந்தா "போனா போகுது, எல் லாரும் கையெழுத்து போடுறாங்க நாமளும் போட்டுருவோம்"னு ஒதுங்கியிருக்கலாம்.

ஆனா அந்த அம்மாவுக்குத் தன்னோட படிப்பு மேலயும், அந்த நேர்மை மேலயும் இருந்த நம்பிக் கை பெருசு.

"நீ என்ன வேணா பண்ணு, எனக்குச் சரியான பதில் கிடைக்கிற வரைக்கும் பேனா முனையைக் கூட அசைக்க மாட்டேன்"னு ஒத்தக் கால்ல நின்னாங்க. கிட்டத்தட்ட ஒரு வருஷம் அந்த கம்பெனியோட மிரட்டலைத் தாங்கிக்கிட்டு அந்த ஃபைலை லாக் பண்ணி வச்சாங்க.

1961ல ஜெர்மனியில இருந்து வந்த அந்த நியூஸ் உலகத்தையே நடுங்க வச்சிருச்சு. அந்த



மருந்தைச் சாப்பிட்ட தாய்மார்களுக்குப் பிறந்த குழந்தைகள் எல்லாம் கை, கால் இல்லாம, வெறும் முட்டி மட்டுமோ இல்ல சின்னதா மீன் துடுப்பு மாதிரி வளர்ந்த உறுப்புகளோட பிறக்க ஆரம்பிச்சது. பத்தாயிரம் குடும்பம் உருக்குலைஞ்சு போச்சு, பாதி குழந்தைங்க பிறந்த சில நாளுலயே செத்துப் போச்சு.

அந்த நேரத்துலதான் அமெரிக்காவுக்கு உறைச்சது, அந்தப் பெண் சிங்கம் மட்டும் அன்னைக்கு மிரட்டலுக்குப் பயந்து கையெழுத்துப் போட்டிருந்தா, இன்னைக்கு அமெரிக்காவுல எத்தனையோ குடும்பம் கண்ணீர்ல மிதந்திருக்கும். அன்னைக்கு அவங்க தடுத்தது ஒரு பேப்பர் இல்ல, ஒரு தலைமுறையோட அழிவை. இதைக் கேள்விப்பட்ட உடனே அதிபர் கென்னடி அந்த பெண்மணி கூப்பிட்டு மெடல் கொடுத்து கௌரவிச்சாரு.

பிரான்சிஸ் கெல்சி 90 வயது வரை அதே துறையில் பணியாற்றி, லட்சக்கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்றினார், இது நமக்கெல்லாம் ஒரு பெரிய பாடம், அதாவது ஊரே ஒரு பக்கம் போனாலும், நாம் செய்வது சரி என்று நமக்குத் தெரிந்தால், அந்த நேர்மைக்காகப் போராடத் தயங்கக்கூடாது.

இன்று அமெரிக்காவில் ஆரோக்கியமாக விளையாடிக்கொண்டிருக்கும் எத்தனையோ தலைமுறையினர், தங்களுக்குத் தெரியாமலேயே அந்தப் போராட்ட குணமிக்கப் பெண்ணுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள், நிஜமான வீரம் என்பது சண்டை போடுவது மட்டுமல்ல, தர்மத்திற்காகத் தனித்து நின்று 'வேண்டாம்' என்று சொல்லும் அந்தத் துணிச்சல்தான் என்பதை அவர் நிரூபித்து விட்டார்.

இவ்வளவு பெரிய அநியாயத்துக்கு அப்புறம் தான், உலகத்துல ஒரு மருந்து மார்க்கெட்டுக்கு வரணும்னா அது எவ்ளோ கடுமையான டெஸ்ட்டுகளைத் தாண்டணும்ங்கிற அந்த 'எஃப் .டி.ஏ' சட்டமே இன்னும் ஸ்ட்ராங் ஆச்சு.

ஒரு தனி மனுஷியோட பிடிவாதம், இன்னைக்கு நாம சாப்பிடுற ஒவ்வொரு மாத்திரையோட பாதுகாப்புக்கும் அஸ்திவாரமா இருக்கு. அந்த அம்மா 101 வயசு வரைக்கும் வாழ்ந்துட்டு 2015ல தான் இயற்கை எய்தினாங்க, நிஜமாவே அவங்க ஒரு நடமாடும் தெய்வம் தான்.



# கடுமையான பாலைவனத்தை ரப்பர்தோட்டமாக மாற்றும் சீனா

பாலைவனம்னாலே நமக்கு என்ன ஞாபகம் வரும்? சுட்டெரிக்கிற வெயில், எங்கிட்டு பார்த்தாலும் மணல், அப்புறம் அங்கொண்ணும் இங்கொண்ணுமா இருக்குற கள்ளிச்செடி தான் ஞாபகம் வரும். ஆனா, சீனாக்காரங்க இப்போ உலகத்தையே ஆச்சரியத்துல மூழ்கடிக்கிற மாதிரி, ஒண்ணுத்துக்கும் உதவாத கோபி பாலைவனத்தை ஒரு "ராணுவ ரப்பர்" உற்பத்தி மையமா மாத்திட்டாங்க.

இது சும்மா ஏனோ தானோன்னு செஞ்ச காரியம் கிடையாதுங்க, மத்த நாடுகள் கிட்ட கையேந்தக் கூடாதுன்ற அவங்களோட பல வருஷத்து கனவு. குறிப்பா சொல்லப்போனா, தாய்லாந்து, வியட்நாம்னு மத்த ஊர்கள்ல இருந்து ரப்பரை இறக்குமதி பண்றதை நிறுத்திட்டு, தங்களுக்குத் தேவையான ரப்பரைத் தாங்களே தயாரிச்சுக்கப் போறாங்க. இதுக்காக அவங்க கையில எடுத்திருக்கிற ஆயுதம் தான் "டுஸாங்" (Duzhong) அப்படின்ற ஒரு மரம்.

இந்த டுஸாங் மரம் ரொம்ப காலமா சீன மருத்துவத்துல கஷாயம் போடவும், மருந்துக்கும் பயன்பட்டுச்சு. ஆனா, சீன விஞ்ஞானிகள் இதைக் கொஞ்சம் ஆழமா ஆராய்ஞ்சு பார்த்தப்போ தான் ஒரு விஷயம் புரிஞ்சுது. இந்த மரத்தோட பட்டை, இலை, பழம்னு எல்லாத்துலயும் ஒரு தரம் வாய்ந்த ரப்பர் ஒளிஞ்சிருக்கு.

அதுவும் சாதாரண ரப்பர் கிடையாதுங்க, இதைக் கொண்டு செய்யப்படுற பொருட்கள் அவ்வளவு சீக்கிரம் தேயாதாம். 2016ல ஒரு சின்ன இடத்துல ஆரம்பிச்ச இந்த ஆராய்ச்சி, இப்போ பல லட்சம் ஹெக்டேர் பாலைவனப் பகுதியை ஒரு பச்சை பசேல்னு இருக்குற காடா மாத்திருச்சு.

பாலைவனத்துல தண்ணி இல்லாம எப்படி வளரும்னு நீங்க நினைக்கலாம், அதுக்காகத் தான் அவங்க "பயோஇன்ஜினியரிங்" செஞ்சு, கம்மியான தண்ணியிலயும், அந்தப் பயங்கரமான வெப்பத்துலயும் தாக்குப்பிடிச்சு வளர்ற மாதிரி இந்த மரங்களை மாத்தி அமைச்சிருக்காங்க.

இந்த ரப்பரோட உண்மையான கதை எங்க இருக்கு தெரியுமா? இதைக் கொண்டு தயாரிக்கப்படுற "பஞ்சர் ஆகாத டயர்கள்" தான்

இப்போ ராணுவ வட் டாரத்துல செம டாப்பிக். சாதாரண ரப்பரோட இந்த டுஸாங் ரப்பரை ஒருஅஞ்சு சதவீதம் கலந்தாலே போதும், அந்த டயர்கள் பயங்கர கெட் டியா மாறிடும்.

போர்க்களத்துல ஓடும்போது ஆணி குத்துனாலும் சரி, குண்டு சிதறல் பட்டாலும் சரி, அந்தத் துளைகளை இந்த ரப்பர் தானாவே மூடிக்குமாம். இதனால வண்டி பஞ்சர் ஆகாம ஓடிக்கிட்டே இருக்கும். அதுமட்டும் இல்லாம,



இந்த ரப்பரை வச்சு போர் விமானங்கள் மேல ஒரு பூச்சு பூசுறாங்க. அந்தப் பூச்சு இருந்தா, எதிரி நாட்டோட ரேடார்கள்ல இருந்து வர்ற அலைகளை இது அப்படியே உறிஞ்சிடும்.

இதனால ரேடார் கண்ணுக்கே தெரியாம, ஒரு "பேய் விமானம்" மாதிரி எதிரி நாட்டுக் குள்ள புகுந்துட்டு வர முடியும். இதைப்பார்க்கும் போது, சீனா தன்னோட ராணுவ பலத்தை எந்த அளவுக்கு ரகசியமா ஏத்திட்டு இருக்குன்னு நமக்குத் தெரியுது.

சுருக்கமா சொல்லப்போனா, சீனா ஒரு கல்லுல ரெண்டு மாங்காய் அடிச்சிருக்காங்க. ஒன்னு, பாலைவனமா இருந்த இடத்தை வள மான இடமா மாத்திட்டாங்க. இன்னொன்னு, ரப்பருக்காக மத்த நாடுகளை நம்பி இருக்கிற அவசியத்தை மொத்தமா குறைச்சிட்டாங்க.

இது உலக ரப்பர் சந்தையிலயே ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணப்போகுது. முன் னாடி சாதாரண மூலிகையா இருந்த டுஸாங், இப்போ சீனாவோட பாதுகாப்புக் கவசமா நிக்குது. இதைப் பார்க்கும்போது, "முயற்சி பண்ணா பாலைவனத்தையும் பச்சைக் காடா மாத்தலாம், அதுல இருந்து ராணுவ ரப்பரையும் எடுக்கலாம்"னு சீனா உலகத்துக்கே நிருபிச்சு காட்டியிருக்காங்க. இது நிஜமாவே ஒரு நவீன காலத்து அதிசயம் தான்

இந்த பதிவு உங்களுக்குப் பிடிச்சிருந்தா ஒரு சின்ன கமெண்ட் தட்டிவிடுங்க, அப்படியே உங்க நண்பர்களுக்கும் ஷேர் பண்ணுங்க நீங்க காட்டுற இந்த அன்புதான் எனக்கு அடுத்தடுத்த பதிவுகளை எழுத ஒரு பெரிய உத்வேகமா இருக்கும்






# சொர்க்கம் இருக்கும் இடம்கண்டு பிடிப்பு

## 273,000,000,000,000,000,000,000,000,000,000 மைல்களுக்கு அப்பால்

சொர்க்கம் இருக்கும் சரியான இடம்கண்டு பிடிப்பு பூமியிலிருந்து 273,000,000,000,000,000, 000,000,000,000,000 மைல்களுக்கு அப்பால் உள்ளதாக விஞ்ஞானி தகவல்

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் இயற்பியல் விரிவுரையாளரான டாக்டர் மைக் கேல் கில்லன் (Dr. Michael Guillen), சொர்க்கம் என்பது பிரபஞ்சத்தின் கண்ணுக்குத் தெரிந்த எல்லையில் (Cosmic Horizon) அமைந்திருக் கலாம் என்ற ஒரு சுவாரஸ்யமான கோட்பாட் டைப் பகிர்ந்துள்ளார்.

விண்மீன் மண்டலங்கள் ஒளியின் வேகத் தில் (வினாடிக்கு 186,000 மைல்கள்) நம்மை விட்டு விலகிச் செல்லும் புள்ளியே இந்த அண்ட எல்லை எனப்படுகிறது. நவீன அண்டவியலின் படி, இதுவே நம்மால் அவதானிக்கக்கூடிய பிரபஞ்சத்தின் இறுதி எல்லை ஆகும்.

தற்போதைய அறிவியல் கோட்பாடுகளின்படி, இந்த எல்லையில் 'காலம்' (Time) என்பது செயலிழந்து விடுகிறது. அங்கு கடந்த காலம், நிகழ்காலம் அல்லது எதிர்காலம் என்ற பாகுபாடு இல்லை. இந்த 'காலமற்ற நிலையை' சொர்க்கம் குறித்த மத ரீதியான விளக் கங்களுடன் கில்லன் ஒப்பிடுகிறார்.

பிரபஞ்சத்தில் அறியப்பட்ட மிகப் பழமை யான பொருட்கள் இந்த எல்லையிலேயே காணப்படுகின்றன. எனவே, இந்த எல்லைக்கு அப்பால் உள்ள எவையும் 'பெருவெடிப்பு' (Big Bang) நிகழ்வுக்கு முந்தையதாக இருக்க வேண்டும். இது விண்வெளி மற்றும் காலத் திற்கு (Space-time) அப்பாற்பட்ட ஒரு இடமாக இது கருதப்படுகிறது.

இந்தக் கருத்தானது ஒரு அறிவியல் கண்டுபிடிப்பு என்பதை விட, தத்துவ மற்றும் ஆன்மீக ரீதியிலான ஒரு விளக்கமாகவே விஞ்ஞானிகளால் பார்க்கப்படுகிறது. பிரபஞ் சத்தின் ஆழமான மர்மங்களை ஆராயும் போது அறிவியலும் நம்பிக்கையும் எவ்வாறு ஒன்றிணைகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.








# 1,800 பேரை பலிவாங்கிய புயல்

கடல் ராமேஸ்வரத்திற்குள் நுழைந்த இரவு ஒரு மனிதன் விளக்கை எரிய வைத்தான்.

(ராமேஸ்வரம், தமிழ்நாடு 1964)

டிசம்பர் 22, 1964. இரவு 11:55 மணி.

பாம்பன் பாலம் அமைதியாக இருந்தது.

கடைசி ரயில் மணிக்கணக்கில் முன்னதாகவே கடந்து சென்றுவிட்டது. மீனவர்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். நிலவின் கீழ் கடல் மென்மையாக சுவாசித்தது.

உள்ளேரயில்வே சிக்னல் கேபின், ஒரு மனிதன் தனியாக அமர்ந்திருந்தான்.

அவரது பெயர்எஸ். ரங்கநாதன்.

அவருக்கு அருகில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு மினுமினுத்தது. வானிலை எச்சரிக்கைகளுடன் வானொலி வெடித்தது ஒரு புயல் நகர்ந்து கொண்டிருந்தது, ஆனால் என்ன வரப்போகிறது என்று யாரும் கற்பனை செய்யவில்லை.

பின்னர் காற்று மாறியது.

வலுவாக இல்லை.

கோபக்காரர்.

மணிக்குகாலை 12:30 மணி, கடல் எழத் தொடங்கியது.

பாலத் தூண்களில் அலைகள் மோதின. தண்டவாளங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மரப் படகுகள் பொம்மைகளைப் போல தூக்கிச் செல்லப்பட்டன.

ரங்கநாதன் வெளியே வந்தார்.

அவர் சாத்தியமற்ற ஒன்றைக் கண்டார்.

கடல் இருந்ததுரயில் பாதையில் ஏறுதல்.

மூலம்காலை 12:45, புயல் அலை ராமேஸ்வரம் நகரத்திற்குள் பாய்ந்தது. வீடுகள்







இடிந்து விழுந்தன. வீதிகள் மறைந்தன. மக்கள் அலறி அடித்து இருளில் ஓடினர்.

பின்னர் ரங்கநாதன் பயங்கரமான ஒன்றை நினைவு கூர்ந்தார்:

ஒரு பயணிகள் ரயில் கடக்க திட்டமிடப்பட்டதுபாம்பன் பாலம்நிமிடங்களில்.

இப்போது உள்ளே நுழைந்தால், அது நேராக கடலில் விழுந்துவிடும்.

சிக்னல் கேபின் பலமாக குலுங்கியது. காற்று ஒரு உயிரினத்தைப் போல ஊளையிட்டது. கதவு வழியாக தண்ணீர் கொட்டியது.

ரங்கநாதனுக்கு வினாடிகள் இருந்தன.

அவனால் ஓட முடியும்.

அதற்கு பதிலாக, அவர் சிக்னல் லீவரைப் பிடித்தார்.

மின்சாரம் சலசலத்தது. விளக்கு குலுங்கியது.

அவர் சிக்னலை கட்டாயப்படுத்தினார்ஆபத்து.

மணிக்குகாலை 12:50 மணி, ஒரு பெரிய அலை கேபினுக்குள் மோதியது.

ரங்கநாதன் சுவரில் தூக்கி வீசப்பட்டார்.

ஆனால் சிக்னல் சிவப்பு நிறத்திலேயே இருந்தது.

பிரதான நிலப்பகுதியில், ரயில் பாலத்திற்குச் சற்று தொலைவில் நின்றது சத்தமிட்டுக் கேட்டது.

சில நிமிடங்கள் கழித்து,அதற்கு அப்பால் உள்ள முழு ரயில் பாதையும் வெள்ளத்தில் மூழ்கியது..

பாம்பனை கடல் விழுங்கியது.

முடிந்துவிட்டது 1,800 பேர் இறந்தனர்அன்று இரவு. ஒரு முழு நகரமும் துண்டாடப்பட்டது. அன்று அதிகாலையில் ஒரு ரயில் கடலில் மூழ்கியது.

ஆனால்நூற்றுக்கணக்கான பயணிகள் உயிர் பிழைத்தனர்.ஏனென்றால் ஒரு மனிதன் தனது பதவியை கைவிட மறுத்துவிட்டான்.

சில நாட்களுக்குப் பிறகு ரங்கநாதனின் உடல் சிக்னல் கேபினுக்குள் கண்டெடுக்கப்பட்டது.

அவர் கடைசி வரை இருந்தார்.

தேசிய தலைப்புச் செய்திகள் எதுவும் தொடர்ந்து வரவில்லை. நாடு முழுவதும் நினைவுச் சின்னங்கள் எதுவும் இல்லை. பாலத்தின் அருகே ஒரு சிறிய தகடு மட்டுமே இருந்தது.

ஆனாலும் இன்று பாம்பனைக் கடக்கும் ஒவ்வொரு ரயிலும், ஒரு காலத்தில் வாழ்க்கையை விட கடமையைத் தேர்ந்தெடுத்த ஒரு இடத்தைக் கடந்து செல்கிறது.

## 18 மாதம் படுத்த படுக்கை

# அரவிந்த் சாமியை மீட்ட ஆயுர்வேத வைத்தியம்



18 மாதம் படுத்த படுக்கை, ஆப்ரேஷன் செய்யாததால் வந்த வினை; 3 நாளில் நடக்க வைத்த மருத்துவம் பற்றி மனம் திறந்த அரவிந்த் சாமி

புகழின் உச்சியில் இருந்தபோதே திரையுலகை விட்டு ஒதுங்கிய அவர், சமீபத்தில் மெல்போர்ன் இந்தியத் திரைப்பட விழாவில் (IFFM) தனது வாழ்க்கையின் இருண்ட பக்கத்தைப் பற்றி மனம் திறந்துள்ளார்.

தமிழ் திரையுலகில் சாக்லேட் பாயாக அறி முகமாகி தற்போது வில்லன் – ஹீரோ என பயணித்து வரும் நடிகர் அரவிந்த் சாமி, தனது வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவம் மற்றும் விபத்தை சந்தித்தபோது ஏற்பட்ட போராட்டங்கள் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார்.

மணிரத்னம் இயக்கத்தில் வெளியான தளபதி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் அரவிந்த் சாமி. விளம்பர படங்களில் நடித்தன் மூலம் தளபதி பட வாய்ப்பை பெற்ற இவர், அடுத்து மணிரத்னம் இயக்கத்தில் 'ரோஜா', 'பம்பாய்' போன்ற திரைப் படங்கள் மூலம் இந்தியா முழுவதும் பான் இந்தியா ஹீரோவாக பிரபலமானார்.

புகழின் உச்சியில் இருந்தபோதே திரை யுலகை விட்டு ஒதுங்கிய அவர், சமீபத்தில் மெல்போர்ன் இந்தியத் திரைப்பட விழாவில் தனது வாழ்க்கையின் இருண்ட பக்கத்தைப் பற்றி மனம் திறந்துள்ளார்.

2005ம் ஆண்டு ஏற்பட்ட ஒரு விபத்தில், தண்டுவடக் காயம் (Spinal Injury) அரவிந்த் சாமியின் வாழ்க்கையையே புரட்டிப்போட்டது. இதனால் அவர் ஒரு பக்கம் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையானார். சுமார்



ஒன்றரை ஆண்டுகள் அவர் அனுபவித்த உடல் மற்றும் மன ரீதியான வேதனைகள்விவரிக்க முடியாதவை. அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டாம் என்று நான் எடுத்த முடிவால்தான் ஒன்றரை ஆண்டுகள் அந்த வலியைச் சுமந் தேன்," என்று அவர் கூறியுள்ளார்.

இந்த காயத்திற்காக அனைத்து மருத் துவ முறைகளையும் முயன்று பார்த்த அரவிந்த் சாமி, கேரளாவைச் சேர்ந்தஒரு ஆயுர்வேத மருத்துவரின் சந்திப்பு திருப்பு முனையாக அமைந்தது.

அதுவரை அலோபதி மருத்துவத்தையே நம்பியிருந்த அரவிந்த் சாமிக்கு, ஆயுர்வேதம் ஒரு புதிய நம்பிக்கையைத் தந்தது. ஆயுர்வேத சிகிச்சை தொடங்கிய 3வது நாளிலேயே அவர் நடக்கத் தொடங்கினார். ஆயுர்வேதத்தில் உள்ள "பழங்கால ஞானம்" தனக்கு உதவிய தாக அவர் குறிப்பிட்டார்.

அதே சமயம் இது எனது தனிப்பட்ட அனுபவம் மட்டுமே. இதையே எல்லாரும் பின் பற்ற வேண்டும் என்று நான் கூறவில்லை. உங்களை கவனிக்கும் மருத்துவர்களின் அறிவுரையை மட்டுமே நீங்கள் பின்பற்ற வேண் டும்," என்று அவர் தெளிவுபடுத்தினார்.

இந்த 18 மாத கால போராட்டத்தை ஒரு உடல் ரீதியான பிரச்சனையாகப் பார்க்கா மல், ஒரு மன ரீதியான சவாலாகவே எதிர் கொண்டதாக குறிப்பிட்டுள்ள அரவிந்த் சாமி, வலி மற்றும் நடமாட முடியாத சூழலைத் தாங்கும் சக்தி நம் மனதில்தான் இருக்கிறது.

அந்த நேரத்தில் "ஏன் எனக்கு இப்படி நடந்தது?" என்று ஒருபோதும் நான் வருந் தியதில்லை. மூளையைச் சுறுசுறுப்பாக வைத் திருக்க செஸ், பஸில்ஸ் மற்றும் போர்டு கேம்களை விளையாடினேன். இதன் மூலம் ஒரு நாளைச் சோர்வின்றி கடக்க முடிந்தது என்று கூறியுள்ளார்.

ஒரு கட்டத்திற்கு பிறகு, உடல்நிலை தேறிய அரவிந்த், தனது குழந்தைகளுக்காக நேரத்தைச் செலவிட விரும்பியுள்ளார். ஆனாலும் அவரை அறிமுகம் செய்த இயக் குனர் மணிரத்னம் தான் இயக்கிய கடல் படத்தில் மீண்டும் அவரை நடிக்க வைத்து அரவிந்த் சாமியின் ரீஎன்ட்ரிக்கும் காரணமாக இருந்தார்.

இது குறித்து பேசிய அவர், 13 ஆண்டு களுக்குப் பிறகு மீண்டும்நடிப்பேன் என்று நான் நினைக்கவில்லை.மருந்துகள் உட்கொண்டதால் உடல் எடை அதிகரித்திருந்தது, தலைமுடி உதிர்ந்திருந்தது. நான் தயாராக இல்லை என்று அவரிடம் சொன்னேன்.

அந்த சமயத்தில் மணிரத்னத்தின் ஊக்கத் தால் உடல் மற்றும் மன ரீதியாகத் என்னைத் தயார்படுத்திக்கொண்டு 'கடல்' படத்தில் நடிக்க உதவியது என்று கூறியுள்ளர்.

கடல் படம் பெரிய வெற்றியைப் பெறாவிட் டாலும், அரவிந்த் சாமியை மீண்டும் வெள்ளித் திரைக்குக் கொண்டு வந்தது. தற்போது அவர் 'காந்தி டாக்ஸ்' (Gandhi Talks) என்ற திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார்.

இன்று மீண்டும் ஒரு வெற்றிகரமான நடிகராகத் திகழும் அரவிந்த் சாமியின் பயணம் பலருக்கும் ஒரு சிறந்த உத்வேகம் என்று சொல்லலாம்.

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


இந்தியா எனது மூன்றாவது ஆட்சிக்காலத்தில்
டாப்-3 பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கும்
திருச்சி அரசு மருத்துவமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு
நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்திற்கு மத்திய அரசு ஏற்பு
8122664699


பழங்குடியின பெண்களை நிர்வாணம்: வெடித்த போராட்டம்
8122664699



எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை, உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,


முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி நிறைவு

**Whatsup no.8122664699**

TamilnaduEpaper.com

# உலக அழிவு வெடிபொருள் கண்டுபிடித்தவரின் மனவருத்தத்தால் உருவானது

# நோபல் பரிசு

ஆல்ஃபிரட் நோபல் அப்படின்னு ஒரு பெரிய மனுஷன் இருந்தார், அவர் தான் இந்த டைனமைட் வெடிமருந்தை கண்டுபிடிச்சவரு. ஆனா தன்னோட கண்டுபிடிப்பு உலக அழிவுக்குப் பயன்படுதேன்னு வருத்தப்பட்ட அவர், தான் சேர்த்து வச்ச எல்லா சொத்தையும் ஒரு டிரஸ்ட் மாதிரி மாத்தி, அதுல வர்ற வட்டியைக் கொண்டு வருஷா வருஷம் உலகத்துக்கே நல்லது செய்ற வங்களுக்கு பரிசு கொடுக்கணும்னு எழுதி வச்சுட்டாரு.

இதுல இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், அப்புறம் உலகத்துல சண்டை சச்சரவு இல்லாம பார்த்துக் கிறவங்களுக்கு 'அமைதி பரிசு'ன்னு மொத்தம் அஞ்சு விஷயத்துக்கு தான் முதல்ல கொடுத்துட்டு இருந்தாங்க, அப்புறமா பொருளாதாரத்தையும் இதுல சேர்த்துக்கிட்டாங்க.

இந்த பரிசு வாங்குறது சாதாரண விஷயம் கிடையாது, உலகத்துல இருக்குற மூளைக்காரங்க எல்லாம் இந்த ஒரு மெடலுக்காக தான் காத்துட்டு இருப்பாங்க. ஒவ்வொரு வருஷமும் அந்தந்த துறையில பயங்கரமா சாதிச்சவங்களை தேடிப் பிடிச்சு, ஸ்வீடன் நாட்டுல ஒரு பெரிய விழா நடத்தி கோடிக்கணக்குல பணமும், ஒரு தங்க மெட லும் கொடுப்பாங்க.

முதல்ல 1913ல 'கீதாஞ்சலி' அப்படின்ற கவிதை புத்தகத்துக்காக ரவீந்திரநாத் தாகூர் ஐயா தான் இலக்கியத்துல இந்தியாவுக்கு முதல் நோபல் பரிசை வாங்கிக் கொடுத் தாரு.

அதுக்கப்புறம் 1930ல நம்ம தமிழ் நாட்டைச் சேர்ந்த சர் சி.வி. ராமன் ஐயா, ஒளிச்சிதறல் பத்தின அவரோட 'ராமன் விளைவு' கண்டு பிடிப் புக்காக இயற் பி ய ல் ல மெ ட ல்



அடிச்சாரு.அப்புறம் இந்தியாவி லிருந்து அமெரிக் காவுக்குப் போய் செட்டில் ஆன ஹர் கோவிந்த் குரானா 1968ல மருத்துவத்துக்காகவும், 1983ல விண்வெளி ஆராய்ச்சியில அசத் துன சுப்பிரமணி யன் சந்திரசேகர் இயற்பியலுக் காகவும் இந்த விருதை வாங்கினாங்க.



இவங்க ரெண்டு பேரும் வெளி நாட்டுல இருந்தாலும் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவங்கதான்.

மக்களுக்காக சேவை செஞ்சவங்கன்னு பார்த்தா, 1979ல அன்னை தெரசாவுக்கு அமை திக்கான நோபல் பரிசு கிடைச்சது, அவங்க நம்ம ஊர் மக்களுக்குப் பண்ணின சேவைக்கு கிடைச்ச மிகப்பெரிய அங்கீகாரம் அது.

பொருளாதாரத்துல நம்ம அமர்த்தியா சென் 1998ல வறுமையை ஒழிக்கிறது பத்தின ஆராய்ச்சிக்காகப் பரிசு வாங்கினாரு. அப்புறம் 2009ல வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் வேதியியலுக் காகவும், 2014ல குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரா போராடுன கைலாஷ் சத்யார்த்தி அமைதிக் காகவும் இந்த விருதை தட்டித் தூக்குனாங்க.

கடைசியா 2019ல அபிஜித் பானர்ஜி பொருளா தாரத்துக்காக விருது வாங்குனாரு. இவங்க எல்லாருமே அவங்க அவங்க துறையில செஞ்ச மிகப்பெரிய சாதனைக்காகத்தான் உலகமே கொண்டாடுற இந்த கௌரவத்தைப் பெற்றிருக் காங்க.

இந்த நோபல் பரிசுக்கு ஆட்களைத் தேர்ந் தெடுக்கிற முறை இருக்கே, அது ரொம்பவே ரக சியமானது

எடுத்தவுடனே யாரையும் செலக்ட் பண்ணிட மாட்டாங்க, இதுக்குன்னு ஒரு பெரிய ப்ராசஸ் இருக்கு. ஒவ்வொரு வருஷமும் செப்டம்பர் மாசமே அடுத்த வருஷத்துக்கான வேலையை ஆரம்பிச்சிருவாங்க.

உலகத்துல இருக்குற முக்கியமான பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், முன்னாடியே நோபல் பரிசு வாங்குனவங்க, அப்புறம் சில முக்கியமான நாட் டுத் தலைவர்கள்னு ஒரு குறிப் பிட்ட குரூப்புக்கு "உங்களுக்குத் தெரிஞ்சு தகுதியான ஆள் யாரு?"ன்னு ரகசியமா லெட்டர் அனுப்புவாங்க.

அங்கிருந்து வர்ற ஆயிரக்கணக்கான பெயர் களைத் தான் நோபல் கமிட்டி கையில் எடுப்பாங்க. அந்தப் பெயர்களை எல்லாம் அந்தந் தத் துறை சார்ந்த நிபுணர்கள் வச்சு அக்குவேறு ஆணிவேறா அலசுவாங்க.

இப்படி வருஷம் பூரா செக் பண்ணி, கடைசியில ஒரு சின்ன லிஸ்ட் ரெடி பண்ணுவாங்க. அந்த லிஸ்ட்ல இருக்குறவங்கள்ல யாருக்குப் பரிசு கொடுக்கலாம்னு அக்டோபர் மாசம் ஓட்டெடுப்பு நடத்தி வெற்றியாளரை முடிவு பண்ணுவாங்க.

ஒரு முக்கியமான விஷயம் என்னன்னா, யாருடைய பெயர் எல்லாம் பரிசீலனையில இருந்த துங்கிற விவரத்தை 50 வருஷம் வரைக்கும் வெளியே சொல்லவே மாட்டாங்க, அவ்வளவு ரகசியமா வச்சிருப்பாங்க.

அப்புறம், ஒரு வருஷத்துக்கு ஒரு துறையில அதிகபட்சம் மூணு பேருக்கு மட்டும்தான் இந்த விருதை பிரிச்சு கொடுப்பாங்க. இறந்து போனவங்களுக்குப் பொதுவா இந்த விருது கொடுக்க மாட்டாங்க, ஆனா வெற்றியாளர் பெயரை அறிவிச்சதுக்கு அப்புறம் அவர் இறந் துட்டா அந்த விருது அவருக்குப் போய் சேரும். இப்படி பல கட்ட சோதனைகளைத் தாண்டி வர்ற தால தான் இந்த விருதுக்கு இன்னைக்கும் இவ் வளவு மவுசு இருக்கு.

இந்தத் செலக்ஷன் கமிட்டியைப் பத்திச் சொல் லணும்னா, இது ஏதோ ஒரு குரூப் எடுக்குற முடிவு கிடையாது, இதுக்குன்னு நாலு முக்கியமான பெரிய நிறுவனங்கள் இருக்கு. இயற்பியல், வேதியியல் மற்றும் பொருளாதாரப் பரிசுகளைத் தேர்வு செய்ய 'ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆஃப் சயின்சஸ்' (Royal Swedish Academy of Sciences) பொறுப்பு ஏத்துக்குறாங்க.

இவங்கதான் உலகத் தரம் வாய்ந்த விஞ் ஞானிகளை வச்சு ஒருத்தரோட கண்டுபிடிப்பு உண்மையிலேயே உலகத்தை மாத்துதான்னு செக் பண்ணுவாங்க. மருத்துவப் பரிசைத்



தேர்ந்தெடுக்க 'கரோலின்ஸ்கா இன்ஸ்டிடியூட்' (Karolinska Institute) அப்படின்ற மருத்துவக் குழு இருக்கு, இவங்கதான் அந்த ஆராய்ச்சி எந்த அளவுக்கு மனித உயிர்களைக் காப்பாத்துதுன்னு முடிவு பண்ணுவாங்க. இலக்கியத்துக்கான ஆளை 'ஸ்வீடிஷ் அகாடமி' (Swedish Academy) தேர்வு செய்யுறாங்க, இவங்க உலகத்துல இருக்குற எல்லா மொழி இலக்கியங்களையும் கூர்ந்து கவனிப்பாங்க.

ஆனா இந்த 'அமைதி பரிசு' மட்டும் கொஞ்சம் ஸ்பெஷல், ஏன்னா இதை ஸ்வீடன் காரங்க தேர்ந்தெடுக்க மாட்டாங்க, நார்வே நாட்டு நாடாளுமன்றத்தால தேர்ந்தெடுக்கப்பட்ட அஞ்சு பேர் கொண்ட ஒரு குழுதான் முடிவு பண்ணுவாங்க.

இந்த ஒவ்வொரு கமிட்டியும் ஒரு வருஷம் முழுசும் மத்தவங்க யார்கூடவும் பேசாம, எந்த அரசியல் தலையீடும் இல்லாம ரொம்ப நேர்மையா வேலை செய்வாங்க. இவங்களுக்கு உதவி செய்யுறதுக்காக அந்தந்தத் துறையில இருக்குற பெரிய எக்ஸ்பர்ட்ஸை கன்சல்ட் பண்ணுவாங்க. இவங்க எடுக்குற முடிவுதான் இறுதியானது, அதை யாராலயும் மாத்த முடியாது. அதனாலதான் இவங்க ஒருத்தரைத் தேர்ந்தெடுத்தா அது உலகத்துக்கே ஒரு பெரிய அங்கீகாரமா பார்க்கப்படுது.

இந்த நோபல் மெடல் பத்திச் சொல்லணும்னா, இது சாதாரண மெடல் கிடையாது.

இந்த மெடல் 18 கேரட் பச்சத் தங்கத்துல (Green Gold) செஞ்சு, அதுக்கு மேல 24 கேரட் சுத்தமான தங்கத்துல கோட்டிங் கொடுத்திருப்பாங்க. இதோட எடை கிட்டத்தட்ட 175 கிராம் இருக்கும், பார்க்கவே நல்லா மினுமினுன்னு ஜொலிக்கும். எல்லா மெடலோட முன் பக்கத்துலயும் ஆல்ஃபிரட் நோபலோட முகம் அச்சு அப்படியே இருக்கும், கூடவே அவரோட பிறந்த வருஷம் அப்புறம் இறந்த வருஷமும் (18331896) லத்தீன் எழுத்துக்கள்ல பொறிச்சிருப்பாங்க.

மெடலோட பின் பக்கம் தான் ரொம்ப ஸ்பெஷல், ஏன்னா ஒவ்வொரு துறைக்கும் பின் பக்கம் இருக்குற டிசைன் மாறும். .இயற்பியல் மற்றும் வேதியியல் மெடல்ல இயற்கைத் தேவதையோட திரையை ஒரு பெண் தேவதை விளக்குற மாதிரி செதுக்கி இருப்பாங்க,

அதாவது அறிவியலை வச்சு இயற்கையோட ரகசியத்தை மனிதன் கண்டுபிடிக்கிறான் அப்படிங்கிறது தான் இதோட அர்த்தம். அமைதிப் பரிசுக்கான மெடல்ல மூணு பேர் ஒண்ணா கைகோர்த்து நிக்கிற மாதிரி இருக்கும்,

இது உலக ஒற்றுமையை குறிக்குது. மிக முக்கியமா, அந்த மெடல்ல அந்தந்த வருஷம் பரிசு வாங்குன வெற்றியாளரோட பெயரும் தெளிவா செதுக்கப்பட்டிருக்கும். 1980க்கு முன்னாடி வரைக்கும் 23 கேரட் தங்கத்துலயே செஞ்சாங்க, அதுக்கப்புறம் தான் இப்ப இருக்குற மாதிரி மாத்துனாங்க. ஒருத்தர் வாங்குற இந்த மெடல் அவரோட தலைமுறைக்கே ஒரு பெரிய



சொத்து மாதிரி

இந்த நோபல் பரிசோட பண மதிப்பைக் கேட்டா கண்டிப்பா ஆச்சரியப்படுவீங்க. ஒவ்வொரு வருஷமும் இந்தத் தொகை கொஞ்சம் முன்ன பின்ன மாறும், ஆனா பொதுவா ஒரு துறைக்குச் சுமார் 10 மில்லியன் ஸ்வீடிஷ் குரோனா (Swedish Krona) கொடுப்பாங்க.

நம்ம ஊர் காசுக்குக் கணக்குப் பண்ணிப் பார்த்தா, இது கிட்டத்தட்ட 8 கோடி ரூபாயிலிருந்து 9 கோடி ரூபாய் வரைக்கும் வரும். இந்த முழுத் தொகையும் ஆல்ஃபிரட் நோபல் விட்டுட்டுப் போன சொத்தை முதலீடு செஞ்சு, அதுல வர்ற வட்டியிலிருந்து தான் கொடுக்குறாங்க.

ஒருவேளை ஒரு துறைக்கு ரெண்டு அல்லது மூணு பேர் சேர்ந்து தேர்வாகியிருந்தா, அந்த 9 கோடி ரூபாயை அவங்களுக்குள்ள சமமா பிரிச்சுப்பாங்க.

கூடவே கொடுக்குற அந்தச் சான்றிதழ் (ஞிவீஜீறீஷீனீணீ) கூட ரொம்ப விசேஷமானது. அதை சாதாரணமா பிரிண்ட் போட மாட்டாங்க, ஒவ்வொரு வெற்றியாளருக்கும் தனித்தனியா கைப்பட வரைஞ்சு (Hand-painted) அழகா தயார் பண்ணுவாங்க.

அந்த வெற்றியாளர் என்ன சாதனை செஞ்சாரோ, அதை விளக்குற மாதிரி ஒரு ஓவியம் அந்தச் சான்றிதழ்ல இருக்கும். பல வெற்றியாளர்கள் இந்த மெடலையும் சான்றிதழையும் தங்களோட வாழ்நாள் பொக்கிஷமா பாதுகாப்பாங்க, சிலர் அந்தப் பணத்தை அப்படியே ஏழை எளிய மக்களுக்கோ அல்லது தங்களோட அடுத்தகட்ட ஆராய்ச்சிக்கோ தானமா கொடுத்துடுவாங்க.

இந்த உலகத்துல அறிவாளிங்கன்னு அங்கீகரிக்கப்படுறதுக்கு இது ஒரு பெரிய உந்துதலா இருக்கு.

உலகமே ஆசைப்படுற இந்த விருதை "எனக்கு வேண்டாம்"னு சொன்னவங்களும் இருக்காங்க, சில கட்டாயத்துனால வாங்க முடியாம போனவங்களும் இருக்காங்க. இதுல ரொம்ப முக்கியமான ஆள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஜீன் பால் சார்த்தர் (Jean-Paul Sartre).

1964ல இவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிச்சாங்க, ஆனா இவர் "ஒரு எழுத்தாளன் தன்னை ஒரு நிறுவனத்துக்குள்ள அடைச்சுக்கக் கூடாது, எந்த ஒரு அரசு அங்கீகாரமும் எனக்குத் தேவையில்லை"னு சொல்லி ரொம்ப கெத்தா அந்தப் பரிசை வாங்க மறுத்துட்டாரு.

அதே மாதிரி 1973ல வியட்நாம் நாட்டுத் தலைவர் லி டக் தோ (Le Duc Tho) என்பவருக்கு அமெரிக்கா கூட சமாதானம் பேசினதுக்காக அமைதிப் பரிசு கொடுத்தாங்க. ஆனா அப்போ

வியட்நாம்ல நிஜமான அமைதி இன்னும் வரலன்னு சொல்லி அவரும் அந்தப் பரிசை வாங்கல.

இன்னொரு பக்கம், சில பேர் வாங்க ஆசைப்பட்டும் அவங்க நாட்டு அரசியல் காரணங்களால வாங்க முடியாம போயிருக்கு. உதாரணத்துக்கு, ஜெர்மனியை ஹிட்லர் ஆட்சி செஞ்சப்போ, அவரோட கொள்கைகளுக்கு எதிரா இருந்த மூணு விஞ்ஞானிகளை நோபல் பரிசு வாங்க அவர் விடவே இல்லை.

ஆனா போர் முடிஞ்சதுக்கு அப்புறம் அவங்க வந்து மெடலை மட்டும் வாங்கிக்கிட்டாங்க. அதே மாதிரி ரஷ்ய எழுத்தாளர் போரிஸ் பாஸ்டர்நாக் என்பவரையும் சோவியத் யூனியன் அரசு மிரட்டி அந்தப் பரிசை வாங்க விடாம தடுத்துட்டாங்க.

இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா, மகாத்மா காந்தி அடியைப் பின்பற்றி தான் பல பேருக்கு அமைதிப் பரிசு கிடைச்சது, ஆனா காந்திக்கு அஞ்சு முறை பெயர் பரிந்துரை செய்யப்பட்டும் கடைசி வரைக்கும் அவருக்கு அந்தப் பரிசு கிடைக்கவே இல்லை. இதை இன்னைக்கும் நோபல் கமிட்டியே ஒரு பெரிய குறையா நினைச்சு வருத்தப்படுறாங்க.

நோபல் பரிசு பத்தி இன்னும் சில செம இன்ட்ரஸ்டிங்கான விஷயங்கள் இருக்கு, அதையும் தெரிஞ்சுக்கோங்க. இந்த உலகத்துல ஒருத்தர் ஒருமுறை நோபல் பரிசு வாங்குறதே பெரிய விஷயம், ஆனா சில பேர் ரெண்டு முறை வாங்கி அசத்தியிருக்காங்க. அதுல ரொம்ப முக்கியமானவங்க மேரி கியூரி

இவங்கதான் முதன்முதல்ல ரெண்டு வெவ்வேறு அறிவியல் துறையில (இயற்பியல் மற்றும் வேதியியல்) நோபல் பரிசு வாங்குன லேடி.

அதே மாதிரி ரெட் கிராஸ் (Red Cross) அப்படின்ற சேவை அமைப்புக்கு இதுவரைக்கும் மூணு முறை அமைதிக்கான நோபல் பரிசு கிடைச்சிருக்கு. இன்னொரு பக்கம், சில குடும்பமே நோபல் பரிசு குடும்பமா இருக்கு.

மேரி கியூரி, அவரோட புருஷன், அப்புறம் அவங்க பொண்ணு, மருமகன் என அந்த ஒரே குடும்பத்துல மட்டும் அஞ்சு நோபல் பரிசுகள் இருக்குன்னா பாத்துக்கோங்களேன்

வயசானவங்க மட்டும் தான் வாங்குவாங்களான்னு கேட்டா அதுவும் கிடையாது. ரொம்ப சின்ன வயசுல நோபல் பரிசு வாங்குன பெருமை பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூசுப்சாயைச் சாரும்

இவங்க வெறும் 17 வயசுல அமைதிப் பரிசு வாங்கினாங்க. அதே மாதிரி ரொம்ப வயசான




காலத்துல, அதாவது 97 வயசுல ஜான் பி.குட் எனஃப் என்பவர் லித்தியம் பேட்டரி கண்டுபிடிப்புக்காக வேதியியல்ல பரிசு வாங்கினாரு. சில சமயம் ஒருத்தர் பண்ணுன பெரிய கண்டுபிடிப்புக்கு பல வருஷம் கழிச்சு கூடப் பரிசு கொடுப்பாங்க, ஏன்னா அந்த கண்டுபிடிப்பு காலப்போக்குல எவ்வளவு உண்மையா இருக்குன்னு செக் பண்ணுவாங்க. இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த விருது, இன்னைக்கும் உலகத்துல இருக்குற ஒவ்வொரு அறிவியலாளருக்கும், எழுத்தாளருக்கும் ஒரு பெரிய கனவுன்னே சொல்லலாம்.

நோபல் பரிசின் அதிகாரப்பூர்வ தளம்: **Nobel-Prize.org**

நோபல் பரிசு யூடியூப் சேனல்: **YouTube - Nobel Prize Official**

இதுவரை பரிசு பெற்றவர்களின் முழுப் பட்டியல்: **All Nobel Prizes List**

இந்தத் தளங்களுக்குச் சென்று பார்த்தால், நான் சொன்ன சுவாரஸ்யமான கதைகளைத் தாண்டி இன்னும் பல நுணுக்கமான விஷயங்களை உங்களால் தெரிந்து கொள்ள முடியும்.



# அறிவியலே குடிவந்த ஆராய்ச்சி குடும்பம்

அறிவியலே குடிவந்த ஒரு குடும்பம் நீல்ஸ் போர் முதல் பேரன் தாமஸ் வரை ஒரு 'கெத்தான' கதை

அறிவியல்னா ஏதோ லேப்ல மட்டும் நடக்குற விஷயம்னு நம்ம ஊர்ல நினைப்போம், ஆனா ஒரு குடும்பமே லேப் குள்ளேயே பொறந்து வளர்ந்தா எப்படி இருக்கும்? அதுதான் இந்த "போர்" ஃபேமிலி. இந்த போட்டோவைப் பார்த்தாலே தெரியும், அதுல ஒரு குட்டிப் பையன் வந்து கரும்பலகையில கணக்கு போடுறானே, அதுதான் இந்த கதையோட ஹைலைட்.

கதையை முதல்ல இருந்து ஆரம்பிப்போம். நீல்ஸ் போர்னு ஒருத்தரு, அவர்தான் இந்தசாம் ராஜ்யத்தோட 'பெரியப்பா'. எலக்ட்ரான் எப்படி சுத்துது, ஆட்டம் (Atom) எப்படி வேலை செய்யுதுன்னு உலகத்துக்கே பாடம் எடுத்தவரு.

இவரு எவ்வளவு பெரிய ஆளுன்னா, நம்ம ஐன்ஸ்டீன் கிட்டயே நேருக்கு நேரா நின்னு விவாதம் பண்ணுவாரு. "கடவுள் தாயக் கட்டை விளையாட மாட்டாரு"ன்னு ஐன்ஸ்டீன் சொன்னோ, "ஐன்ஸ்டீன், கடவுள்என்ன பண்ணனும்னு நீங்க சொல்லாதீங்க"ன்னு பதிலடி கொடுத்த மனுஷன் இவரு. 1922ல இவரு நோபல் பரிசு வாங்கினப்போ, டென்மார்க் தேசமே இவரைத் தலைமேல தூக்கி வச்சுக் கொண்டாடுச்சு. ஆனா, மனுஷன் தலைக்கனம் இல்லாம, தன் வீட்டுப் பிள்ளைகளையும் அதே மாதிரி அறிவாளியா வளர்த்தாரு.

அவருக்குப் அப்புறம் வந்தவர் தான் அவரோட பையன் ஆர்கே போர் (Aage Bohr). அப்பாவுக்குத் தப்பாம பொறந்த புள்ளைன்னு இவரைத்தான் சொல்லணும். அப்பா எலக்ட்ரானைப் பிடிச்சாருன்னா, இவரு அந்த அணுவோட கரு (Nucleus) எப்படி ஆடுதுன்னு கண்டுபிடிச்சாரு. 1975ல இவரும் நோபல் பரிசைத் தட்டித் தூக்கினாரு. யோசிச்சுப் பாருங்க, ஒரு வீட்டுல அப்பாவும் மகனும் தனித்தனியா நோபல் பரிசு வாங்குறதுங்கிறது எல்லாம் வேற லெவல் சாதனை

இவங்க ரெண்டு பேரும் சேர்ந்து டென்மார்க்ல அந்த 'நீல்ஸ் போர் இன்ஸ்டிடியூட்'ல வேலை பார்த்துட்டு இருந்தப்போ எடுத்த போட்டோ தான் இப்போ வைரல் ஆகிட்டு இருக்கு.

அந்த போட்டோவுல, அப்பாவும் மகனும்

போர்டுல பிசிக்ஸ் கணக்குப் போட்டுட்டு இருக்கப்போ, நைஸா ஒரு குட்டிப் பையன் முன்னாடி வந்து "நான் ஒரு கணக்கு போடட்டுமா?"னு கேக்குற மாதிரி ஒரு சீன் இருக்குமே, அந்தப் பையன் தான் தாமஸ் போர்.

இப்போ அவரு நம்ம காலத்துல ஒரு பெரிய சயின்டிஸ்ட். தண்ணி எப்படி ஓடுது, செடிகளுக்குள்ள தண்ணி எப்படி மேல ஏறுதுன்னு பிசிக்ஸை வச்சு ஒரு புது ரூட் போட்டுட்டு இருக்காரு. மூணு தலைமுறையா இவங்க வீட்டுல சோறு வேகுற சத்தத்தை விட, பிசிக்ஸ் விவாதம் பண்ற சத்தம் தான் அதிகமா கேட்குமாம்

இன்னொரு முக்கியமான விஷயம் என்னன்னா, இந்த நீல்ஸ் போர் நம்ம ஊரு விஞ்ஞானி ஹோமி பாபாவுக்கு ஒரு பெரிய வழிகாட்டியா இருந்திருக்காரு.

பாபா அங்க போனப்போ, அவரை ஒரு தம்பி மாதிரி கவனிச்சுக்கிட்டு, அறிவியலோட நுணுக்கங்களைச் சொல்லித் தந்தது நம்ம நீல்ஸ் போர் தான். இவங்க குடும்பத்துல அறிவாளிங்க மட்டும் இல்ல, செம வீரர்களும் இருந்தாங்க. நீல்ஸ் போரோட தம்பி ஹரால்டு போர் ஒரு மேத மேட்டிஷியன் மட்டும் இல்ல, ஒலிம்பிக்ல கால்பந்து விளையாடி வெள்ளிப் பதக்கம் வாங்கினவரு.

மொத்தத்துல இந்த "போர்" குடும்பம் நமக்குச் சொல்ற பாடம் ஒண்ணுதான்: அறிவுங்கிறது தேடத் தேட வளரும். ஒரு நல்ல சூழலும், விடாமுயற்சியும் இருந்தா, ஒரு குடும்பமே உலக வரலாற்றை மாத்தி எழுத முடியும்.

அந்த போட்டோவுல இருக்குற அந்தப் பையனோட கணக்கு, வெறும் போர்டுல முடிஞ்சுடல, அது உலக அறிவியலோட அடுத்த கட்டத்துக்குப் போயிருக்கு. நம்ம வீட்டுப் பிள்ளைகளையும் இதே மாதிரி கேள்வி கேட்கவும், தேடவும் விட்டோம்னா, ஒவ்வொரு வீட்டுலயும் ஒரு "போர்" உருவாகுவாங்கங்கிறதுல சந்தேகமே இல்லை

1927ல பெல்ஜியம் நாட்டுல சால்வே கான்பரன்ஸ்னு (Solvay Conference) ஒரு மீட்டிங் நடந்துச்சு. உலகத்துல இருக்குற அத்தனை பெரிய விஞ்ஞானிகளும் அங்க ஒண்ணா கூடியிருந்தாங்க.

அப்போ ஐன்ஸ்டீனுக்கு இந்த குவாண்டம் மெக்கானிக்ஸ் மேல ஒரு சின்ன கடுப்பு இருந்துச்சு. ஏன்னா, குவாண்டம் விதியோட படி, ஒரு சின்ன துகளை (particle) நாம பார்க்குற வரைக்கும் அது எங்க இருக்குன்னு யாராலயும் சொல்ல முடியாது. இது ஐன்ஸ்டீனுக்கு சுத்தமா பிடிக்கல. அவரு கடுப்பாகி, "கடவுள் இந்த உலகத்தை படைக்கும்போது தாயக்கட்டை போட்டு விளையாட மாட்டாரு (God does not play dice)"ன்னு ஒரு போடு போட்டாரு. அதாவது, எல்லாமே தெளிவா நடக்கும், ரேண்டமா எதுவும் நடக்காதுன்னு அவர் சொன்னாரு.

உடனே நம்ம நீல்ஸ் போர் சளைக்காம சிரிச்சிகிட்டே ஒரு பதிலடி கொடுத்தாரு பாருங்க, அங்கதான் அவர் கெத்து நிக்குது. "ஐன்ஸ்டீன், கடவுள் என்ன பண்ணனும்னு அவருக்கு நீங்க ஆர்டர் போடாதீங்க!"னு சொன்னாரு. இது சும்மா பேச்சுக்கு மட்டும் இல்லங்க, அன்னைக்கு ஆரம்பிச்ச இந்த விவாதம் பல வருஷம் நீடிச்சுச்சு. ஒவ்வொரு நாளும் காலைல ஐன்ஸ்டீன் ஒரு புது தந்திரமான கேள்வியோட வருவாரு, போர் மண்டையை பிச்சிகிட்டு யோசிச்சு சாயந்தரம் அதுக்கு ஒரு சரியான விளக்கம் கொடுத்து ஐன்ஸ்டீனை வாயடைக்க வைப்பாரு.

இவங்க ரெண்டு பேருக்கும் நடுவுல கருத்து வேறுபாடு இருந்தாலும், ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருந்த மரியாதை ரொம்ப அதிகம். ஐன்ஸ்டீன் ஒருமுறை சொன்னாராம், "போர் மாதிரி ஒருத்தர் என் காலத்துல வாழ்றதே எனக்கு ஒரு பெரிய பாக்கியம்"னு.

அந்த காலத்துல இவங்க ரெண்டு பேரும் சேர்ந்து ட்ரெயின்ல போயிட்டு இருக்கும்போது, பிசிக்ஸ் பத்தி விவாதம் பண்ணிட்டே அவங்க இறங்க வேண்டிய ஸ்டேஷனை விட்டுட்டு பல மைல் தூரம் தள்ளிப் போன கதையெல்லாம் உண்டு

அந்த அறிவுப் பசிதான் இன்னைக்கு நாம கையில வச்சிருக்க கம்ப்யூட்டர், செல்போன்ல இருந்து லேசர் வரைக்கும் எல்லாத்துக்கும் அடிப்படை. நீல்ஸ் போர் அந்த விவாதத்துல கத்துக்கிட்ட விஷயங்களைத்தான் தன் பிள்ளைகளுக்கும் பேரனுக்கும் சொல்லிக் கொடுத்தாரு. அதனாலதான் அந்த போட்டோவுல அந்தப் பேரன் தாமஸ் போர் அவ்வளவு ஆர்வமா கணக்கு போடுறாரு.

அறிவியல்ங்கிறது வெறும் பாடம் இல்லைங்க, அது ஒரு தேடல். ஐன்ஸ்டீன் மாதிரியான ஜாம்பவான்களுக்கே சவால் விட்ட அந்த போர் குடும்பத்து கதை, நிஜமாவே ஒரு இன்ஸ்பிரேஷன்




# இதயத்தை காத்த நடிகரின் தொண்டு நிறுவனம்

திரையில் தோன்றும் நாயகனைவிட, அதை விடப் பெரிதான இதயம் கொண்ட மனிதரையே நாடு பத்மபூஷண் வழங்கி கௌரவித்திருக்கிறது என்பதை நிரூபிக்கும் செய்திதான் இது.

சாலக்குடியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் ரியோவின் ஒரு வயது மகள் ராஹேலின் கண்களில் தெரியும் அந்த ஒளி—எந்த விருதையும் விட பெரியது.

மகளின் அறுவை சிகிச்சைக்கான செலவுகளை ஏற்க முடியாமல் தவித்த ரியோவின் முன், கடவுளின் தூதனைப் போல மம்மூட்டியின் ‘வால்சல்யம் ’

திட்டம் வந்தது. Care and Share International Foundation மூலம் தகவல் அறிந்த நடிகர் மம்முட்டி, தாமதமின்றி குழந்தைக்கு அவசர சிகிச்சை ஏற்பாடு செய்ய உத்தரவிட்டார். ஆலுவா ராஜகிரி மருத்துவமனையில் டாக்டர் வினீத் பினுவின் தலைமையில் நடைபெற்ற சிக்கலான ரோபோட்டிக் பைலோபிளாஸ்டி அறுவை சிகிச்சையின் மூலம், இன்று ராஹேல் நலமடைந்து வருகிறார்.

மம்மூட்டியின் தலைமையில் Care and Share அமைப்பு தொடங்கிய ‘வால்சல்யம்’ திட்டத்தின் மூலம், இலட்சங்கள் செலவாகும் இத்தகைய அறுவை சிகிச்சைகள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களின் குழந்தைகளுக்கு முழுமையாக இலவசமாக வழங்கப்படுகின்றன.

“மகளேஞ் இதோ நம்ம மம்மூக்க,” என்று டிவி திரையில் பத்மபூஷண் செய்தியை காட்டி ரியோ மகளிடம் சொல்லும் போது, அது வெறும் வார்த்தையல்ல—அந்தக் குடும்பத்தின் பிரார்த்தனையும் நன்றியும். திரையின் நட்சத்திரம் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் அவர் கருணையின் மரம்.



# 80 டன் 'மோவாய்' சிலைகள் நடந்தது எப்படி?

80 டன் எடை, 30 அடி உயரமுடைய 900 'மோவாய்' சிலைகள் நடந்து சென்றது எப்படி? விஞ்ஞானிகளின் அதிரடி விளக்கம்!

பசிபிக் பெருங்கடலின் நடுவே, மனித நடமாட்டமே இல்லாத ஒரு தனிமையான தீவில், வானத்தைப் பார்த்தபடி பிரம்மாண்டமான கற்சிலைகள் நின்றுகொண்டிருக்கின்றன. ஈஸ்டர் தீவு என்று அழைக்கப்படும் இந்த இடத்தில் உள்ள சுமார் 900 'மோவாய்' (Moai) சிலைகள் கடந்த 900 ஆண்டுகளாக உள்ளன.

இந்த சிலைகள் சுமார் 80 டன் எடை, 30 அடி உயரமுடையவை. நவீன இயந்திரங்கள் இல்லாத அந்த காலத்தில் மனிதர்கள் எப்படி இவற்றை கிலோமீட்டர் கணக்கில் நகர்த்திச் சென்றார்கள்? இது ஒரு தீர்க்கப்படாத மர்மமாகவே இருந்தது. ஆனால், தற்போது விஞ்ஞானிகள் இதற்கு ஒரு அதிரடியான விடையைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஈஸ்டர் தீவின் பூர்வகுடி மக்களான 'ராப்பா







நூயி' மக்களிடம் கேட்டால், அவர்கள் ஒரு சுவாரசியமான பதிலைச் சொல்வார்கள். "சிலைகள் தாங்களாகவே நடந்து சென்றன" என்பதுதான் அந்த பதில்.

ஆரம்பத்தில் விஞ்ஞானிகள் இதை ஒரு கதையாகவே பார்த்தனர். சிலைகளை மரக் கட்டைகள் மீது படுக்க வைத்து உருட்டிச் சென்றி ருக்கலாம் என்று வாதிட்டனர். ஆனால், அங்குள்ள மலைப்பாங்கான பாதைகளில் இது சாத்தியமில்லை என்பது நிரூபணமானது.

சமீபத்தில் பிங்காம்டன் பல்கலைக்கழகம் மற்றும் அரிசோனா பல்கலைக்கழகம் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில், அந்த சிலைகள் உண்மையிலேயே நடந்து தான் சென்றன என்பதை 3D மாடலிங் மூலம் நிரூபித்துள்ளனர்.

இதை விஞ்ஞானிகள் 'ராக்கிங்' நுட்பம் என்றழைக்கின்றனர். சிலைகளை செங்குத்தாக நிறுத்தி, அவற்றின் அடிப்பகுதியைச் சற்று வளைவாகச் செதுக்கியுள்ளனர். சிலைகளின் கழுத்துப் பகுதியில் நீண்ட கயிறுகளைக் கட்டி, இருபுறமும் ஆட்கள் நின்று இழுத்துள்ளனர்.

ஒரு பக்கம் இழுக்கும்போது சிலை ஒருபுறம் சாயும், பின் மறுபுறம் இழுக்கும்போது அடுத்த பக்கம் சாயும்.

இப்படி இடவலமாகச் சிலைய ஆட்டும்போது, அது மெல்ல மெல்ல முன்னோக்கி நகரத் தொடங்கும். நாம் ஒரு பெரிய பீரோவை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்தப் பயன்படுத்தும் அதே நுட்பம்தான் இது.

சிலைகள் எப்படி நகர்ந்தன என்பது ஒரு மர்மம் என்றால், அவை ஏன் அந்த குறிப்பிட்ட இடங்களில் வைக்கப்பட்டன என்பது மற்றொரு மர்மம். இதற்கும் விஞ்ஞானிகள் ஒரு விடையைக் கண்டுபிடித்துள்ளனர்.

தீவு முழுவதும் ஆய்வு செய்தபோது, எங்கு எங்கு பிரம்மாண்டமான சிலைகள் உள்ளனவோ, அங்கெல்லாம் நிலத்தடி நன்னீர் ஊற்றுகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். தீவைச் சுற்றியுள்ள கடல் நீர் உப்பாக இருந்தாலும், நிலத்தடிநீர் கிடைக்கும் இடங்களை அடையாளம் காட்டவே இந்தச் சிலைகள் நிறுவப்பட்டிருக்கலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும் சில ஆய்வுகள், இந்தச் சிலைகள் வைக்கப்பட்ட இடத்தைச் சுற்றியுள்ள மண் மிகவும் வளமாக இருப்பதை உறுதி செய்துள்ளன. சிலைகளைச் செதுக்கும்போது வெளிவந்த எரிமலை பாறைத் துகள்கள் மண்ணில் கலந்து, அங்கு பயிர்கள் செழித்து வளர உதவியுள்ளன. அதாவது, இந்தச் சிலைகள் அந்த மக்களின் வாழ்வாதாரமான விவசாயம் மற்றும் குடிநீருக்கான வழிகாட்டிகளாகவும் இருந்துள்ளன என்பது ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பழங்கால மனிதர்கள் தங்களின் அறிவாற்றலால் கடினமான காரியங்களையும் எவ்வளவு எளிமையாகச் செய்துள்ளனர் என்பதற்கு ஈஸ்டர் தீவு சிலைகளே சிறந்த உதாரணமாக உள்ளன.



# பூத கோலா வழிபாட்டின் பின்னணி என்ன?

பூத கோலா அல்லது தெய்வ கோலா என்பது துளுநாடு பகுதியைச் சேர்ந்த துளு பேசும் மக்களின் பாரம்பரிய வழிபாட்டு முறை.

காந்தாரா திரைப்படம் வெளியான பிறகு, பூத வழிபாடு பற்றிய ஆர்வம் அதிகரித்துள்ளது.

சமீபத்தில், திருப்பதி பிரம்மோற்சவத்தின் போது மாடவீதியில் சிலர் பூத வேட மணிந்து தெருக்களில் நடனமாடியது சர்ச்சையை ஏற்படுத் தியது.

பூத வழிபாடு என்றால் என்ன? அது கட வுளை வழிபடுவதா அல்லது ஆவிகளை வழி படுவதா? இந்த வழிபாட்டை யார், எங்கே செய் கிறார்கள், ஏன் செய்கிறார்கள் என்பதைத்தெரிந்து கொள்வோம்

பூத வழிபாடு எங்கே நடைபெறுகிறது?

பூத கோலா அல்லது தெய்வ கோலா என்பது துளுநாடு பகுதியைச் சேர்ந்த துளு பேசும் மக்க ளின் பாரம்பரிய வழிபாட்டு முறை.

இது தெற்கு கர்நாடகா மற்றும் வடக்கு கேரளா எல்லைப் பகுதிகளில் காணப்படுகிறது.

இந்த வழிபாடு, மேற்குத் தொடர்ச்சி மலை களுக்கும் அரேபியக் கடலோரத்துக்கும் இடை யே, குறிப்பாக தட்சிண கன்னடா, உடுப்பி (கர்நாடகா) மற்றும் காசர்கோடு (கேரளா) மாவட் டங்களில் மிகவும் பிரபலமாக உள்ளது.

துளு மக்களுடன் சேர்ந்து, சில மலையாளி களும் இந்த வழக்கத்தை பின்பற்றுகிறார்கள்.

கேரளாவின் தெய்யம் என்ற கலை வடிவம் ஆவிகளை மையமாகக் கொண்டது, இது பூத கோலாவுடன் நெருக்கமான தொடர்புடையது.

இந்த வழிபாட்டு மரபு, கர்நாடகாவின் யட்சகான கலை மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

பூத கோலா என்றால் என்ன?

கோலா' எனும் சொல் செயல்திறன், திருவிழா அல்லது ஒரு கலை வடிவம் என்பதைக் குறிக்கிறது.

'பூதா' என்பது தெலுங்கு மற்றும் இந்தியில் 'பேய்' என்று பொருள் கொண்டாலும், சமஸ்கிருதத்தில் இது ஆன்மா, பண்டைய, தெய்வீக, பஞ்சபூதம், தூய்மை, உண்மை போன்ற பல அர்த்தங்களை கொண்டுள்ளது.

பூத வழிபாடு மூன்று வகையாக பிரிக்கப்படுகிறது

மூதாதையர் வழிபாடு

இயற்கை சக்திகளை வணங்குதல்

தெய்வங்களை வணங்குதல்

துளு மரபின்படி உலகம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது:

கிராமப்புறம் – விவசாய நிலம்

காடு – இயற்கை வனங்கள்

பேய் (பூதம்) – கிராமத்தையும் காட்டையும் இணைக்கும், வழிபடப்படும் சக்தி

இந்த பூதங்களும் தெய்வங்களும் உள்ளூர் தலைவர்களின் அதிகாரத்தைத் தீர்மானிக் கின்றன. பக்தர்கள், கிராம பிரச்னைகள் மற்றும் தனிப்பட்ட சிக்கல்களை இந்த தெய்வங்களிடம்

கூறுகிறார்கள். பூத கோலா நிகழ்வுகளில், இந்த தெய்வங்கள் தீர்ப்புகள் வழங்குவதாக நம்பப்படுகிறது.

இந்த வழிபாடு உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை அளிப்பதாக நம்பப்படுகிறது. மற்றவர்களுக்கு இது ஒரு மாறுவேடம் போல தோன்றலாம். ஆனால், துளு மக்களுக்கு, இது தெய்வீகமான வடிவம். அதனால், இதை வெளி உலகிற்கு காட்சிப்படுத்த அவர்கள் விரும்புவதில்லை.

மாறுவேடமாகக் காட்சிப்படுத்தப்படுவதையும் அவர்கள் ஏற்பதில்லை. பக்தியுடன் பயத்தையும்



ஏற்படுத்துவதே இந்த வழிபாட்டின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

"ஒவ்வொரு பிரிவுகளுக்கும் வெவ்வேறு தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இயற்கை தெய்வங்கள், தெய்வங்களாக மாறிய மூதாதையர்கள் போன்ற பலர் உள்ளனர். இந்த வழிபாடு துளுநாட்டில் உள்ள மக்களின் உடல் மற்றும் மன நலனுக்காக செய்யப்படுகிறது" என்று 'பேய்களை விரட்டுபவராக' நம்பப்படும் தயானந்த ஜி கட்டல்சர் பிபிசியிடம் தெரிவித்தார்.

"பூதம்" என்ற வார்த்தைக்கு பல அர்த்தங்கள் இருந்தாலும், "தெய்வீக வழிபாடு" என்றே துளு மக்கள் பெரும்பாலும் குறிப்பிடுகிறார்கள். இந்த பகுதிகளில் பொதுவாக நவம்பர் முதல் மே மாதம் வரை பருவமழை பெய்கிறது.

துளுநாட்டின் சில சாதிகளில், வாரிசுரிமை மகனுக்குப் பதிலாக மருமகனுக்குச் செல்கிறது. தயானந்தருடன் தெய்வச் சடங்கைச் செய்வது அவரது மருமகன் தான்.

வெவ்வேறு தெய்வங்கள் இந்த வழிபாட்டில் பல வகையான தெய்வங்கள் உள்ளன.

கிராமங்கள், சில கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகள், சாதிகள், மற்றும் குடும்பங்களுக்கு என தனித்தனி தெய்வங்கள் இருக்கின்றன.

மூதாதையர் தெய்வங்கள், விலங்குதெய்வங்கள், கிராம தெய்வங்கள், வீரர்கள் மற்றும் வரலாற்று நபர்கள் தெய்வமாக வழிபடப்படுகிறார்கள்.

சமணர்களும் இந்த தெய்வத்தை வழிபடுகிறார்கள். ஆண் தலை மற்றும் பெண் உடல், பன்றி தலை மற்றும் பெண் உடல், பயிர்களைப் பாதுகாக்கும் கடவுள், கடல் தெய்வங்கள் மற்றும் வன தெய்வங்கள் போன்ற சிறப்பு வடிவங்களையும் அவர்கள் கொண்டுள்ளனர்.

இந்த தெய்வங்கள் தினசரி வீடுகளில் வழிபடப்படுவதில்லை. வருடாந்திர திருவிழாக்களில் இவை ஒன்றாக வழிபடப்படுகின்றன. ஆனால், அந்தந்த தெய்வங்களின் பொருட்கள் மற்றும் ஆபரணங்களை தொடர்ந்து வழிபடப்படுகின்றன.

பத்ரி என்று அழைக்கப்படும் மக்கள் தெய்வ வேடமிடும் மக்களுக்கு உதவுகிறார்கள்.

இந்த தெய்வங்களில் மொத்தம் மூன்று வகைகள் உள்ளன.

1. இயற்கை சக்திகள் மற்றும் விலங்கு தெய்வங்கள் உதாரணம்: பஞ்சுர்லி, குலிகா, மல்லராய, ஜுமாதி

2. வரலாற்று மற்றும் வீர மனிதர்கள் ஒரு காலத்தில் பூமியில் வாழ்ந்து, பிறகு இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பெற்றவர்கள். இவர்கள் பழங்குடி பாதுகாவலர்கள் என்றும் கருதப்படுகிறார்கள். உதாரணமாக, கொரகஜ்ஜா, கொரடப்பு, அன்னப்பா ஆகியோரைக் கூறலாம்.

3. மூதாதையர்கள் இறந்த மூதாதையர்கள்.

இந்து வேத மற்றும் புராண மரபுகளுடன் நேரடியாக தொடர்புடையதாக இல்லாவிட்டாலும், பல தெய்வங்களின் கதைகள் இந்து புராணங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

உதாரணமாக, இங்குள்ள மக்கள் சிவபெருமான், பஞ்சுர்லி என்ற கடவுளை பூமிக்கு அனுப்பியதாக நம்புகிறார்கள்.

பஞ்சுர்லி என்பது பன்றியின் வடிவம். ஆனால், அது விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் உள்ள வராஹ அவதாரம் அல்ல. இதற்குப் பின்னால் ஒரு தனி கதை உள்ளது.

கைலாயத்தில், சிவனின் தோட்டத்தில் ஒரு

காட்டுப்பன்றி இறக்கிறது. பார்வதி தேவி அதன் குட்டியை வளர்க்கிறார்.

ஆனால், அது தோட்டத்தை அழிக்கத் தொடங்குகிறது. சிவன் அதை கொல்ல முடிவு செய்கிறார். உடனே பார்வதி சிவனை தடுத்து நிறுத்தி, மன்னிப்பு கேட்கிறார்.

அதனால், அந்த பன்றியை பூமிக்கு அனுப்பி, அதை மனிதர்களால் வழிபடப்படும் காவல் தெய்வமாக மாற்றுகிறார் சிவன். இதுதான் பஞ்சுர்லி, மேலும் இது 'சிவ சம்புதா' எனவும் அழைக்கப்படுகிறது.

பஞ்சுர்லி தெய்வம், பயிர்களை காட்டுப்பன்றி களிடமிருந்து பாதுகாக்க வழிபடப்படுகிறது.

இந்த அலங்காரம் செய்வதற்கு பல மணிநேரம் எடுக்கும்.

மூதாதையர் வழிபாடா ஆவிகள் வழிபாடா

துளு நாட்டில் மூதாதையர் வழிபாடு என்பது ஒரு மிகப் பெரிய ஆன்மிக செயல்முறை.தங்கள் விருப்பங்கள் நிறைவேறாமல் இறந்தமுன்னோர் களின் பெயரில் சிறப்பு சடங்குகள் செய்யப் படுகின்றன.

சுமார் 12 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த மூதாதையர்கள் 'பேய்களாக' மாறுகிறார்கள். பின்னர், அவர்கள் பண்டைய தர்ம தெய்வங்க ளுடன் இணைந்து, 'காலே', 'குலே' போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.

"பூதம் என்பது பேய் அல்ல, அனைத்து சடங்குகளையும் முடித்து தெய்வீக நிலையை அடைந்த மூதாதையர். அவர்களை வழிபடுவது பூத வழிபாடு எனப்படும்.

ஆனால், பஞ்சுர்லி, குலிகா, மைசந்தயா போன்ற இயற்கை சக்திகளை வணங்குவது பூத வழிபாடு அல்ல, அவை கடவுளை வணங்கும் வழிபாடுகள்.

எனவே, இந்த வழிபாட்டில் இயற்கை சக்தி கள், மூதாதையர்கள், வரலாற்று மற்றும் வீர மனிதர்கள் வணங்கப்படுகிறார்கள். முழு பூத கலாசாரம் ஒரு கடவுளுக்காக மட்டுமல்ல. இது பல தெய்வங்களை உள்ளடக்கியது." என்று தயானந்தா கூறுகிறார்.

மங்களூரில் வசிக்கும் பம்படா சாதியைச் சேர்ந்தவர் தயானந்தா. தபால் துறையில்இளநிலை ஊழியரான அவருக்கு தற்போது 50 வயதாகிறது. தலைமுறை தலைமுறையாக அவரது குடும்பம் இந்தச் சடங்குகளை செய்து வருகிறது.

சுருக்கமாகச் சொன்னால், இந்த வழிபாடு துளுநாட்டின் வரலாறு, கலாசாரம், ஆன்மீகம் மற்றும் சமூக ஒழுங்கு ஆகிய அனைத்தையும் இணைக்கும் ஒரு செயல்முறை.

இந்த வழிபாட்டு முறை எப்போது தொடங்கியது?

இந்த வழிபாட்டு முறையின் தொடக்க காலம் குறித்து தெளிவான தகவல் இல்லை. ஆனால், சுமார் 700 ஆண்டுகளுக்கு முந்தைய, 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில், இந்த வழிபாட்டின் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

யார் இந்த வழிபாட்டில் பங்கேற்கிறார்கள்?

நளிகே, பம்படா, பரவா போன்ற தலித் மக்களே இந்த பூத கோலா வழிபாட்டில் பங்கேற்



கிறார்கள். ஆனால், இப்பகுதியில் உள்ள பிற சாதியினரும் இந்த தெய்வங்களை பக்தியுடன் வழிபடுகிறார்கள்.

வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் இந்த வழிபாடு, கிராமங்களிலும், உள்ளூர்கிராம தெய் வங்களின் கோயில்களிலும் செய்யப்படுகிறது.

இந்த வழிபாட்டில் ஈடுபடும் மக்கள், அரசுப் பணி, தொழிற்துறை என பல்வேறு தொழில்களில் பணிபுரிகின்றனர். இவற்றின் செலவுகளை சில உள்ளூர் நில உரிமையாளர்கள் ஏற்கும் பாரம் பரியமும் உள்ளது.

இந்தக் கலைஞர்கள் தயாராகும் போது, அந்தக் குடும்பத்தையோ, அல்லது சாதியையோ சேர்ந்த இளைஞர்கள் உதவுவதோடு மட்டு மல்லாமல், அந்தக் கலையைப் பார்த்து கற்றும்



கொள்கிறார்கள்.

"இந்தக் கடவுளை வணங்கும் நாங்கள் அனைவரும் தலித்துகள். இங்குள்ள 16 சாதியினரும் இந்த வழிபாட்டில்பங்கேற்கிறார்கள், அவர்களுக்கென்று மரியாதையும் வழங்கப்படு கிறது. யாராவது நம்மை வணங்குகிறார்கள் என் றால், அது ஒரு தனிநபராக எங்களை வழிபடுவது அல்ல, கடவுளையே வணங்குவதாகும்" என்று தயானந்தா கூறினார்.

இதில் சாதி வாரியான சில விதிகள் உள்ளன.

"எங்கள் சாதியில், இதைச் செய்பவர்கள் கை களில் முத்திரை, கால்களில் மோதிரம், தலையில் முடி, கைகளில் வளையல்கள் அணிவார்கள். சாப்பிடும்போது விளக்கு அணைந்துவிட்டால், மறுநாள் துறவு செய்து பூஜை செய்யும் வரை அரிசி சாப்பாடு சாப்பிடமாட்டார்கள். நோய் வாய்ப்பட்டவர்களை தொடமாட்டார்கள். பசு மற்றும் பன்றி இறைச்சியை சாப்பிட மாட்டார்கள். மற்ற இறைச்சிகளை சாப்பிடலாம். நான் தனிப் பட்ட முறையில் இறைச்சி சாப்பிடுவதை நிறுத்திவிட்டேன். மதுவுக்கு தடை இல்லை, ஆனால் நான் அதை குடிப்பதில்லை" என்கிறார் தயானந்தா.

"பொதுவாக, அதற்கென்று பரம்பரை பரம்பரை யாக சில கிராமங்கள் இருக்கும். அங்குள்ள குடும்பங்கள் மட்டுமே அதைச் செய்வார்கள். இது துளுநாட்டில் மட்டுமே செய்யப்பட வேண்டும். சிலர் இதை வெளியே செய்கிறார்கள். ஆனால் நான் அதைச் செய்வதில்லை. என் தந்தை இதை என்னிடம் சொன்னார்," என்றும் அவர் பகிர்ந்து கொண்டார்.

இந்த வழிபாட்டில் பங்கேற்கும் சில சாதிகளுக் கென்று சில விதிகள் இருக்கின்றன. பண்டைய தாய்வழி சமூகத்தின் தடயங்கள் இன்னும் சில சாதிகளில் காணப்படுகின்றன. சில வாரிசுரிமைகள் தந்தைவழியிலிருந்து இல்லாமல், தாய்வழி மாமாவிடமிருந்து வருகின்றன.

இந்தச் சடங்குக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாகிறது. உடைகள், அலங்காரங்கள், மற்றும் வேடங்கள் வாங்குவதற்கு அதிகப் பணம் செலவாகிறது. சிலரிடம் போதுமான பணம் இருக்கும், சில இடங்களில், இருக்காது. ஆனால், பணம் போதுமானதாக இல்லாவிட்டாலும், சடங்கு நிறைவேற்றப்படுகிறது.

தெய்வத்தின் வேடத்தை அணிவதற்கு முன், அந்த நபர் அந்த தெய்வம் வழிபடப்படும் பகுதி அல்லது கோவிலுக்குச் செல்கிறார். அங்கு, துளு மொழியில் அந்த தெய்வத்தின் வரலாறு அல்லது கதையைப் பாடுகிறார். இந்த பாடல் பத்தனா என்று அழைக்கப்படுகிறது.

சில நேரங்களில், அவர் தானாகவே சிறிய டிரம்மை அடித்து, சிறிது நேரம் பாடி, பின்னர் தெய்வ வடிவம் பெறுகிறார்.

அவர்கள் தாங்கள் சித்தரிக்கும் தெய்வத்தின் வடிவத்திற்கு ஏற்ற முகக்கவசம் அல்லது அலங்காரத்தை அணிந்துகொள்கிறார்கள். உதாரணமாக, ராகேதேஸ்வரியின் வடிவத்தைச் சித்தரிக்கும் ஒருவர், ஆணாக இருந்தாலும் கூட, பல புடவைகள் அணிந்து பெண் வடிவம் பெறுகிறார்.

பூத கோலா நிகழ்வின் போது, தெய்வம் கிராம மக்களுடனும், கிராமத் தலைவருடனும்

பேசுகிறது. பின்னர், ஒவ்வொரு பக்தரும் தங்கள் பிரச்னைகள், சிக்கல்கள் போன்றவற்றை தெய்வத்திடம் கூறுகிறார்கள்.

சில நேரங்களில், தெய்வம் தீர்ப்புகளையும் வழங்குகிறது. இந்த நிகழ்வு மாலை முதல் விடியும் வரை தொடர்கிறது.

"பூத கோலா நடக்கும் போது, நாங்கள் என்ன செய்கிறோம் என்பது ஓரளவு நினைவில் இருக்கும். ஆனால், ஏதோ ஒரு சக்தி எங்களை ஆட்கொள்கிறது. எனது உடல் எடை 60 கிலோ, ஆனால் நான் 100 கிலோ எடையுள்ள ஆபரணங்கள், அலங்காரங்கள் அணிந்து, 13 மணி நேரம், உணவு உண்ணாமல், இரவு முதல் காலை வரை இருப்பேன். அந்த சக்தி எங்கிருந்து வருகிறது? நாங்கள் கடவுள் அல்ல, ஆனால் அந்த நேரத்தில், கடவுளின் கட்டுப்பாட்டில், கூடுதல் சக்தியுடன் இருக்கிறோம். இயற்கையில் காற்று இருப்பது போல, அது கண்ணுக்குத் தெரியாத சக்தி. அந்த சக்தியால் தான் மக்களுக்கு நீதி வழங்க முடிகிறது," என்கிறார் தயானந்தா.

"இது உடலை உறிஞ்சும் அனுபவத்தைப் போன்றது. அப்போது என்ன நடக்கும் என்று எங்களுக்குத் தெரியாது. அதிக எடையுடன், கையில் நெருப்புடன், முழுமையாக எங்களது கட்டுப்பாட்டில் இல்லாமல் செய்கிறோம்.

ஆபரணங்கள் பல கிலோ எடையுள்ளவை. பல்லாயிரக்கணக்கான ஆடைகள் கட்டப்பட் டிருக்கும். முக அலங்காரம் செய்துகொள்ள மட்டும் பல மணி நேரம் ஆகும். அதெல்லாம் எப்படி சாத்தியம்?

அந்த நேரத்தில், இயற்கையின் சக்தி யாலும், கடவுளின் சக்தியாலும் நாங்கள் வழிநடத் தப்படுகிறோம்.

பின்னர் ஒரு லீலையாக, கொஞ்சம் கொஞ் சமாக என்ன நடக்கிறது என்பதை நாம் நினை வில் கொள்கிறோம். பக்தி பயத்துடன் வருகிறது. பயமின்றி பக்தி வராது. கடவுள் மீதான பயம் என்பது அறிவை நோக்கிய முதல் படி.

ஆனால், அந்த பயம் ஒரு ஆசிரியர் மீதான பயத்தைப் போன்றது.

பூதகோல நிகழ்ச்சியின் போது அங்கிருந்த இளைஞர்களிடம் காந்தாராவைப் பற்றிக் கேட்ட போது, அவர்களுடைய கருத்தும் இதேபோன்று தான் இருந்தது.

பொது மேடைகளில் இதை நிகழ்த்தக்கூடாது என்று அம்மக்கள் கூறுகிறார்கள்.

"பிற பகுதிகளுக்குச் சென்ற இந்தப் பகுதி மக்களுக்கு அவர்களுக்கென்று ஒரு செயல் முறை இருக்கிறது என்பதை காந்தாரா மூலம் நான் தெரிந்து கொண்டேன். அவர்கள் இப் போது அதை ஏற்றுக்கொள்கிறார்கள். அது நல்ல விஷயம் தான்."

"ஆனால், இது பொது மேடைகளில் நிகழ்த்தப் படக்கூடாது. இது யட்சகானம், நாடகம் அல்லது திரைப்படம் போன்ற கலை வடிவம் அல்ல. இது கடவுளை வழிபடும் செயல்முறை. இதற்கென்று சில முறைகள் உள்ளன. இது ஒரு பொது நிகழ்ச்சி அல்ல, ஆன்மீகக் கலை." என்கிறார் தயானந்தா.

கல்லூரி மேடைகளில் இளைஞர்கள் இதுபோல செய்து ரீல்ஸ் எடுப்பது வருத்தமளிக்கிறது. பக்திக்கும் ஆர்வத்துக்கும் வித்தியாசம் உள்ளது.



இளைஞர்கள் அந்த வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு இருப்பது பக்தி அல்ல, ஆர்வம். சிலர் இது உண்மையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள்."

"ஆனால் முனிவர், நதி, கடவுள் ஆகியோரின் தோற்றத்தை அறிய முயற்சிக்கக்கூடாது. அவற் றை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் பலனை அவர்கள் அனுபவிக்க வேண்டும். இப்போது சிலர் இதன் மீது ஆர்வத்துடனும் சிலர் பக்தியுட னும் வருகிறார்கள். வேறு சிலர் தங்கள் தொலைபேசிகளில் வீடியோ எடுக்க மட்டுமே வருகிறார்கள்," என்று பகிர்ந்து கொண்டார் தயானந்தா.

அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்

## அருள்தரும் தெய்வம்

இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

## பரிசை அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்

**PADMA MEDIA HOUSE**

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்

அலைபேசி எண்: 9337501889



அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com
எந்தவித மறை முக கட்டணமும் இல்லை
சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,
உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள்,
நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,
Whatsup no.8122664699
TamilnaduEpaper.com